ISSN 1391-9504

# விஜய்

WIJEY - විජේයි

2004 மே 17 - மலர் 01, இதழ் 05

## நாகரிக வளர்ச்சியில் ஆதிவாசிகளின் பங்களிப்பு



கோள்மண்டல போஸ்டரின்
இரண்டாம் கட்டப்பகுதியை
இந்த இதழுடன்
பெற்றுக்கொள்ளத் தவறாதீர்கள்

விலை
ரூபா 10/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மாவின் ஆலோசனைகள்

# மழை வேண்டுமா!

மழை 'சோ' வென்று கொட்டிக் கொண்டிருந்தது. ராகுல் குடை கொண்டு போகாமல் போயிருப் பானோ? என்ற சந்தேகம் அம்மாவுக்கு. அவசர மாக அறையினுள் நுழைந்த அம்மா மேசை மீது அவன் குடை பரிதாபமாக கிடப்பதைக் கண்டாள்.

"இந்தக் காலத்துப் பிள்ளைகள் சொன்னபடி கேட்பதில்லை" என்று தனக்குள்ளே முணுமு ணுத்து விட்டு வாசலில் ராகுலின் வருகைக்காகக் காத்திருந்தாள். சுவர்க் கடிகாரம் ஐந்து முறை இன்னிசை ஒலி எழுப்பி ஓய்ந்தது. மழையும் முற்றாக நின்று விட்டது. ராகுல் தெப்பமாய் நனைந்தபடி வந்து சேர்ந்தான்.

"எத்தனை முறை சொல்லியும் நீ குடையை விட்டிட்டுப் போயிருக்கிறாய். உனக்கு நல்ல தண்டனை கிடைத்திருக்கிறது. போய் உடையை மாற்று.

துவாயால் தலையை நன்றாகத்துவட்டு" என்று சற்றே காரமாக அம்மா ராகுலைப் பார்த்துக் கூறினாள்.

அவன் அவசரமாகக் குளியல் அறைக்கு ஓடி னான். அங்கு குளித்து உடை மாற்றிக் கொண்டு தேநீர்க் கோப்பையுடன் கூடத்துக்கு வந்தான். அம்மா என்னிடம் யாராவது 'உனக்கு என்ன தரவேணும்' என்று கேட்டால் 'நான் என்ன கேட் பேன் தெரியுமா? என்றான் தேநீரை உறிஞ்சியபடி.

"என்ன திடீரென்று ஞானம் பிறக்கிறது" என்று ராகுலைப் பார்த்துப் புன்னகைத்தப்படி அம்மா கேட்டா, 'என்னவென்று நீங்க சொல்லுங்களேன் அம்மா' என்றான் ஆவலுடன். "எனக்கெப்பிடித தெரியும் ஒருவேளை வகுப்பில் முதலாய் வருவேணுமென்று..." அம்மா சொல்லி முடிக்கு முன் ராகுல் குறுக்கிட்டு இல்லவே இல்லை நான் என்ன கேட்பேன் தெரியுமா? "மழையே பெய்யக் கூடாது எனக் கேட்பேன்" என்றான். ராகுலின் இப்படியான பதிலை அம்மா சற்றுமே எதிர் பார்க்கவில்லை.

"உனக்குக் கொஞ்சமாவது புத்தி இருக்கு என்று நினைத்தேன். அது தப்பு" என்றாள் அம்மா சிரித்தபடி. பின்ன என்னம்மா மழை பெய்தால் என்னதான் செய்ய முடிகிறது? வெளியே போய் வரமுடியாது, விளையாட முடி யாது, உடுப்புச் சப்பாத்து எல்லாம் தொம்பல் சே.... மழையை எனக்கு பிடிக்காது."

"ராகுல் மழை இல்லாமல் நாம் என்ன செய்ய முடியும் சொல்?" அம்மா கேட்டாள்.
ராகுல் பதிலேதும் சொல்லாமல் மௌனமாகி விட்டான்.

"ராகுல் நான் சொல்வதைக் கவனி."- அம்மா தொடர்ந்தாள்.
"நாம் வாழ்வதற்கு அவசியம் தேவை மழை. ஜீவராசிகள், மரஞ் செடிகொடிகள் எல்லாவற் றுக்கும் மழை முக்கியம்.

மழை பெய்யாவிடில் பூமி வரண்டு போய் விடும். புல் கூட முளைக்காது. மரஞ்செடி கொடிகளும் உஸ்ணத்தினால் பட்டுப் போகும். நாட்டின் வளங்கள் அழிந்து விடும். விவசாயம் செய்வோர் மழையை நம்பியே வாழ்கிறார்கள். அதிக



உஸ்ணத்தால் நீர் வற்றிப் போகும் அபாயம் உண்டு. தண்ணீருக்காக பல மைல்கள் நடந்து அலைவதும் உண்டு.

மழை பெய்யாவிட்டால் மின் வெட்டு, நீர் வெட்டு நம் நாட்டில் ஏற்படுவது தெரியாதா?

மழை பெய்தால் குளிர்ச்சி உண்டு. அளவுக்கு மீறி தொடர்ச்சியாக மழை பெய்தால் வெள்ளப் பெருக்கு ஏற்படும். வாகனப் போக்குவரத்து தடைப்படும். வீடு வாசல்களை இழப்போரும் உண்டு உயிர்ச் சேதம், பொருட்சேதம் ஏற்படு வதைப் பத்திரிகைகளில் படித்திருப்பாய்! ஏன் தொலைக்காட்சியிலும் பார்த்திருப்பாயே இது இயற்கையின் செயல் இதைத் தடுத்து நிறுத்த நம்மால் ஏலாது.

மழையில்லாமல் வாழமுடியாது" என்று அம்மா சொல்லிய போது ராகுல் அடுக்கடுக்காய்த் தும்மினான்.

"நீ மழையில் நனைந்ததால் வந்தவினை" என்று கூறிய எம்மா எழுந்து சென்று தைலக் குப்பியை எடுத்து வந்து அவன் மூக்கருகிலும், நெற்றியிலும், நெஞ்சிலும் சூடு பறக்கத் தேய்த் துவிட்டாள். அடுக்கடுக்காகத் தும்மி மூக்கடைத்துப் போயிருந்த ராகுலுக்கு அது இதமாக இருந்தது.

"தப்பித் தவறி கடவுள் என்முன் தோன்றி யிருந்து! நானும் மழையை இல்லாமல் செய்து விடு என்று வரம் கேட்டு வைத்திருந் தால் என்ன நடந்திருக்கும்" என்று தனது தவறை உணர்ந்து ராகுல் வெட்கப்பட்டான்.

மழை இல்லாத உலகம் எப்படி இருக்கும். சிந்தித்துப் பாருங்கள்!

- ரூபராணி ஜோ...


## போஸ்டரை இவ்வாறு ஒட்டிக்கொள்ளுங்கள்

**கோள் மண்டல போஸ்டரின் இரண்டாம் கட்டம் இந்த இதழில் வழங்கப்பட்டுள்ளது**



கட்டம் 1

கட்டம் 2



ஒட்டிய பின்னர்

**இரண்டாவது கட்டத்தின் இடது பக்கத்தில் உள்ள வெள்ளை நிறப் பகுதியைக் கத்தரித்து விட்டு, அதனை முதலாவது கட்ட படத்தின், வலது புறக் கரையின்மீது எழுத்துக்கள் பொருந்தக் கூடிய வாறு வைத்து, ஒட்டிக் கொள்ளுங்கள்**

இந்த போஸ்டரின் மூன்றாவது கட்டம் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல: 08, ஹூனுபிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2314714
பெக்ஸ்: 2314968

நாட்டின் கல்வி முறைக்கும் தொழிற் சந்தைக்கும் இடையில் இசைவு காணப்பட வேண்டு மென்றும், இன்றைய தேவை தொழிலை மையமாகக் கொண்ட கல்வியேயன்றி அறிவூட்டுவதற்காக இருக்க வேண்டியதில்லை என்றும் கல்வியியலாளர்கள், பொருளியலாளர்கள், திட்டமிடலாளர்கள் ஆகியோர் ஒரு வாதத்தினை நாட்டின் கல்விமுறை தொடர்பில் முன்வைத்துள்ளனர். அதற்கேற்பக் கல்வி முறையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுத் தொழிற்கல்விக்கும், தொழில் நுட்பக் கல்விக்கும் பெரும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாதத்தில் தர்க்க ரீதியில் ஓர் உண்மை காணப்பட்டாலும் இதன் காரணமாக நடைமுறையில் எந்த அளவுக்குப் பிரதி கூலங்கள் காணப்படுகின்றன என்பதனை இவ்வாதத்தினை முன்வைத்தவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்றே கருதத் தோன்றுகின்றது. குறிப்பாக நாட்டின் சனத்தொகை பாரிய அளவில் பல்கிப் பெருகிக் கொண்டு வருவதும், அதன் காரணமாகத் தொழிற்படையில் சேர்வோரின் தொகை மிக அதிகரித்துள்ளமைக்கேற்ப தொழிற் சந்தையில் தொழில்களின் தொகை அதிகரிக்கவில்லை என்பதும் புள்ளிவிபரம் காட்டும் உண்மை. இதனால் தொழிற் சந்தையில் காணப்படுகின்ற சொற்ப தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள, கல்வியை முடித்துக் கொண்டு வெளியேறும் இளைஞர்கள், பெரும் போட்டா போட்டியை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

குறிப்பாக இலங்கை போன்ற கீழைத்தேய, பழைமை பேணும் மற்றும் மூட நம்பிக்கைகள், சாதியம் நிறைந்த நாடுகளில், சமூக அந்தஸ்து மிக்க தொழிற் பிரிவுகளான மருத்துவம், பொறியியல், சட்டம், கணக்கியல், முகாமைத்துவம், முதலான தொழிற் துறைகளுக்கே பெரிதும் போட்டா போட்டி நிலவுகின்றது.

இத்தகைய போட்டி நிலைமை காரணமாக மேற்படி கல்வித்துறைகளுக்குப் பல்கலைக்கழகப் பிரவேசம் பெற வேண்டுமாயின், ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற வேண்டியுள்ளது. சுமார் ஆயிரம் வெற்றிடங்களுக்குப் பல லட்சம் மாணவர்கள் போட்டியிடுகின்ற துர்ப்பாக்கியமான நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

வெறுமனே உயர் தொழில் ஒன்றையும், பொருளாதார முன்னேற்றத்தையும் அடைந்து விடுவது, வாழ்க்கையின் இலட்சியத்தை அடைந்ததாகக் கருதப்படக் கூடியதா? இன்றைய இத்தகைய கல்விப் போட்டியினால் வாழ்வின் உயர், இலட்சியங்களைக் கற்றுத் தரும் வரலாறு, சமூகவியல், தத்துவம், குடியியல், அரசறிவியல், புவியியல், மொழியியல் முதலான பாடங்களைக் கற்போரும் அருகிவருகின்றனர். மக்கள் மத்தியில், நற்குணங்கள், சமூக தர்மம், குற்றத்துக்குத் தயங்குதல், நேர்மை, ஒழுக்கம், சமூகப் பிரக்ஞை, மனச் சாட்சிக்கான பயம், பகுத்தறிதல், சான்றோரை மதித்தல், பிறருக்குதவுதல், ஈகை முதலான நற்பண்புகளும் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. உலகம் அழிவுப் பாதை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதனை அறிந்தும் அறியாதவர்களாக இவர்கள் உள்ளனர்.

தான் முதல்தர மாணவனாக வரவேண்டும் என்ற சிந்தனை, பெற்றோருக்கன்றிப் பிள்ளைகளுக்கே வரவேண்டும்! அதற்கான அறிவையும் ஆற்றலையும் இன்றைய பாடசாலைகளும், டியூசன்களும் வழங்குவதில்லை. பிள்ளைகள் மனதில் அதற்கான திடசங்கற்பத்தையும், ஆத்ம சக்தியையும், ஓர்மத்தையும் உருவாக்கும் விதத்தில் பெற்றோர் கருமமாற்றினால், அவர்கள், பெற்றோர் விரும்பும் இலக்குகளைத் தாமே சென்றடைவார்கள் என்பதில் ஐயம் கொள்ளத் தேவையில்லை.


- ஆசிரியர்

## டீ.வி. பார்க்கும் மாடு

1,600 கிலோ எடை கொண்ட பாரிய மாடொன்று உங்கள் வீட்டிற்குள் வந்துவிட்டதென்றால் என்ன செய்வீர்கள்? மிரண்டு போவீர்கள் அல்லவா?

ஆனால் கனடாவைச் சேர்ந்த ஜீம் ஸ்லேட்டர் என்பவர் இதே எடை கொண்ட மாடொன்றை தனது வீட்டிற்குள் வளர்த்து பாதுகாத்து வந்துள்ளார். இதனால் அண்மையில் ஏற்பட்ட "மேட்கெவ்" எனப்படும் மாட்டுப் பைத்தியம் நோயிலிருந்து இந்த மாடு தப்பியதாம்.

இது ஸ்லேட்டரின் செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்டுவருவதால், ஸ்லேட்டரின் வரவேற்பறையில் இருந்தவாறு டீ.வி.நிகழ்ச்சிகளையும் ரசித்துப் பார்க்குமாறு கொடுத்து வைத்த மாடு அல்லவா?



## சதுப்பு நிலங்களை பயன்படுத்தத் தடை

இலங்கையிலுள்ள சதுப்பு நிலங்களில் மேல் மாகாணம், மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பகுதிகளிலுள்ள சதுப்பு நிலப்பகுதிகளில் குப்பை, கூழங்கள் அதிகளவில் கொட்டப்படுவதால் இப்பகுதிகளில் சுற்றுப்புறச் சூழல் மாசடைவு ஏற்பட்டுள்ளதாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான சதுப்பு நிலப்பகுதிகளில் அனுமதியின்றி செயற்படுபவர்களுக்கு சட்டத்தின்படி ரூபா பத்தாயிரத்திற்கு குறையாத அபராதமும், இரண்டு வருடங்களுக்கு குறையாக சிறைத் தண்டனையும் வழங்கப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான சதுப்பு நிலப்பகுதிகளில் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் இச்சட்டத்தின்படி தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான நிலங்களை விலைகொடுத்து வாங்குதல் தொடர்பிலும் அவதானமாக இருக்குமாறும் சுற்றுப்புறச் சூழலுக்கான அதிகாரசபை பொதுமக்களை கேட்டுள்ளது.

## பரீட்சை மோசடிகளுக்கு உடந்தையாக இருக்காதீர்கள்

### ஆசிரியர்களுக்கு பரீட்சை திணைக்களம் அறிவுறுத்தல்!

பரீட்சை மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் மீண்டும் பரீட்சைகளில் தோற்ற முடியாதவாறு தடைவிதிக்கப்படும் என்பதனால் பரீட்சைகளின் போது எந்தவொரு விதிமுறை மீறல் நடவடிக்கைகளிலும் ஈடுபடும் மாணவர்களுக்கு எவ்வகையிலும் உதவி, ஒத்தசையாக இருக்க வேண்டாம் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பாடசாலை ஆசிரியர்களை அறிவுறுத்தியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. சா-த, மற்றும் உயர்தரப் பரீட்சைகள் தொடர்பாக 500ற்கும் மேற்பட்ட புகார்கள் கிடைத்துள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விடைகளைப் பார்த்தெழுதுதல், குறிப்புகளை மறைத்திருந்து பார்த்தெழுதுதல், தமக்கு பதிலாக மற்றொருவரை பரீட்சை எழுதச் செய்தல் போன்ற குற்றச்சாட்டுக்களை கொண்டதாக இந்தப் புகார்கள் உள்ளதாகவும் மேற்படி திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பரீட்சைகளில் மோசடி செய்பவர்களுக்கு 5,4,3,2,1, என்ற வருட அடிப்படையில் பரீட்சைகளில் தோற்றுவதற்கு தடை விதிக்கப்படவுள்ளமையால் எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு தவறான நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் எனவும் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டும் உள்ளது.

## உலக சூழல் தினத்தையொட்டி விசேட ஏற்பாடுகள்

உலக சூழல் தினத்தை முன்னிட்டு, நீர் பாவனையை முன்னிலைப்படுத்தி, அரச மற்றும் தனியார் பிரிவுகளின் அனுசரணையின் கீழ் சூழல் காப்பு அனுஷ்டிப்பு விழாவொன்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விழா ஜூன் மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அந்த விழாவின் போது கருத்தரங்குகள், கண்காட்சிகள் உட்படப் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளன. இவற்றோடு நீர் சுத்திகரிப்பு மற்றும் அவை தொடர்பான விற்பனை நிலையங்கள், நீர் பற்றிய அறிவூட்டல்கள், நவீன தொழிநுட்ப முகாமைத்துவம் தொடர்பான போட்டிகள் எனப் பலவித நிகழ்வுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தமிழ், சிங்கள மாணவர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர்.

## ஆங்கில மொழியில் கல்விகற்போரின் எண்ணிக்கை கொழும்பிலேயே அதிகமாம்!


அரசாங்கப் பாடசலைகளில் ஆங்கில மொழியில் கல்வி கற்கும் மாணவ,மாணவிகளின் மொத்த எண்ணிக்கை 16371 ஆகும். இதில் 6787 மாணவர்களும், 6984 மாணவிகளும் அடங்குகின்றனர், என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதே வேளை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு மாவட்டங்களில் ஒருவர் கூட இவ்வாறு ஆங்கில மொழியில் கற்கவில்லை எனவும் மேற் படி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. இதன் படி பின்வரும் மாவட்டங்களில் ஆங்கில மொழியில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு | 3754 | மட்டக்களப்பு | 109 |
| கம்பஹா | 917 | அம்பாறை | 279 |
| களுத்துறை | 364 | திருகோணமலை | 22 |
| கண்டி | 1887 | குருணாகல் | 2330 |
| மாத்தளை | 391 | புத்தளம் | 609 |
| நுவரெலியா | 252 | அநுராதபுரம் | 170 |
| காலி | 931 | பொலன்னறுவை | 88 |
| மாத்தறை | 1292 | பதுளை | 544 |
| அம்பாந்தோட்டை | 489 | மொனராகலை | 312 |
| யாழ்ப்பாணம் | 292 | இரத்தினபுரி | 257 |
| வவுனியா | 84 | கேகாலை | 999 |

இவ்வாறு ஆங்கில மொழியில் கல்வி கற்போரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது கொழும்பிலும் (3754 பேர் ), குருணாகல் (2330) மாவட்டத்திலும் என்பது குறிப்பிடத்தக்கது.

## டாக்காவில் களைக்கட்டியுள்ள வியாபாரம்



உலகிலேயே மிகக்கூடிய சூழல் மாசடைவை ஏற்படுத்தும் நகரமாக பங்களாதேஷின் டாக்கா நகரம் இனங்காணப்பட்டுள்ளது.

சனத்தொகை அதிகரிப்பின் காரணமாகவும், வாகனங்களில் வெளியிடப்படும் புகையின் காரணமாகவும் சூழல் மாசடைவு அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் இந்த மாசடைதலிலிருந்து தமது சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் பங்களாதேஷ் மக்களில் அநேகர் மூக்கினுள் நச்சுப்புகையோ, தூசோ செல்வதைத் தடுக்கும் விதமாக மூக்கைச் சுற்றிவர ஒரு வகை கவசத் துணியொன்றினை அணிந்தவாறு பயணம் செய்யத் தொடங்கியுள்ளனர். இது அங்குள்ள வியாபாரிகளுக்கும் சாதகமாக அமைந்துவிட்டது. உடனடியாக துணியினால் செய்யப்பட்ட மூக்குக் கவசங்களை வீதியோரங்களில் விற்கத் தொடங்கிவிட்டனர். இந்த வியாபாரம் இப்போது அங்கு ஜாம் ஜாம் என நடைபெறுகின்றதாம்.

'விஜய்' அடுத்த இதழ் ஜூன் 07ஆம் திகதி வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய குடும்பத்தில் புதிதாக ஒரு கோள் கண்டுபிடிப்பு!



சூரிய குடும்பத்தில் 9 கோள்கள் மட்டும்தான் உள்ளனவா? இந்தக் கேள்வியைக் கடந்த காலங்களில் எவருமே சிந்தித்தது கிடையாது. ஏனெனில், சூரிய குடும்பத்தில் 9 கோள்களே உள்ளன என்றே இதுவரை நம்பப்பட்டு வந்தது.



சூரியனை ஒன்பது கோள்கள் சுற்றிவருகின்ற அதேவேளையில், கோள்களைச் சுற்றிவருகின்ற உபகோள்கள் ஏராளம் அங்கு உள்ளன எனக் கூறப்படுகின்றது.

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட 'செட்னா' என்ற புதிய கோள் பற்றிய தகவல்கள் இதனை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

வளிமண்டலவியல் ஆய்வுக் களங்களில், இந்நாட்களில் இந்தச் 'செட்னா' (Sedna) கோளைப் பற்றிய பேச்சையே காணமுடிகின்றது. இந்தக் கோள் சூரியனை வலம் வந்துக் கொண்டிருப்பதாக வானியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கோளானது புளுட்டோ கோளின் ¾ பங்கு அளவுடையது.

சூரியனிலிருந்து பூமிக்கு உள்ள தூரத்தின், 76 மடங்கு தொலைவில் இந்தச் 'செட்னா" கோள் வலம் வந்து கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பூமிக்கும் இந்தக் கோளுக்கும் இடையிலான தூரம் 130 பில்லியன் கிலோ மீற்றர்களாகும்.

கலிபோர்னியாவிலுள்ள விஞ்ஞானி மைக்கல் பிரவுன் என்பவரே "செட்னா" கோளினைக் கண்டுபிடித்தவராவார்.

இருப்பினும் இந்தப் புதிய கோளின் பின்னணியைப் பற்றிய பூரண விபரங்களை வழங்க

## இதனை ஒரு கோளாக கருதமுடியுமா?

## விஞ்ஞானிகள் மத்தியில் இருவேறு கருத்துக்கள்!

எந்தவொரு விஞ்ஞானியும் முன்வராத போதிலும் பிரயன் மார்ஸ்டென் என்ற வானியல் ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ள கருத்தின்படி, வளிமண்டலத்தில் இவ்வாறான கோள்கள் ஏராளம் இருப்பதாகவும் ஆனால் இவை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் அறிய முடிகிறது

இவை பூமியை ஒத்த பருமனைக் கொண்டவையாகவும் அமைத்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரது இந்தக் கருத்தையிட்டு ஆராய்ந்து வருகின்ற ஆராய்ச்சியாளர்கள், பூமியை ஒத்த அளவினைக் கொண்ட ஒருகோள், சூரியனுக்கு மிகத் தொலைவில் எவ்வாறு இருக்க முடியும? எனக் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

"புளுட்டோ"வையே ஒரு கோளாக கருத முடியுமா? என்றவோர் சர்ச்சை நிலவி வருகின்ற இன்றைய காலகட்டத்தில் 'செட்னா' வையும் அவ்வாறு ஒரு கோளாகக் குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்காது! எனவும் இன்னுமோர் தரப்பினர் வாதிடுகின்றனர்.

இருப்பினும் மைக்கல் பிரவுன் என்ற விஞ்ஞானியின் கருத்தின்படி, சூரிய மண்டலத்தில் இதுவரை ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்படாத ஒரு பகுதி இருப்பதாகவும், இவ்வாறு ஆராய்ச்சிகளுக்கு உள்ளாகாத ஒரு பகுதியில் பூமியை ஒத்த அளவிலான ஒரு கோள் இருக்கக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.


புளுட்டோ கோளையும் விட, அதிக தூரத்தில் இருப்பதால் 'செட்னா' கோளானது வெப்பம் குறைந்த உறைபனியாகக் காட்சி தருவதாகக் கூறப்படுகின்றது.

எது எப்படியிருப்பினும் இந்தப் புதிய செட்னா கோளின் தன்மையைப் பற்றி முழுமையாக அறியப்படாத போதிலும், அது சூரியனை வலம் வருவதற்கு 10,500 வருடங்கள் செல்லும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போதைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள ஆரம்பக்கட்ட ஆய்வுகளின்படி 'செட்னா' வானது விசாலமான கோளாகக் கருதமுடியாதுள்ளது.

இதன் விட்டம் 1,700 கிலோமீற்றர்களாகும். இருப்பினும் தற்போதைய சர்ச்சை என்னவென்றால் 'செட்னா"வைக் கோள் மண்டலக் குடும்பத்தில் ஓர் அங்கமாக இணைப்பதா? இல்லையா? என்பதேயாகும்.

எனவே இனிவரும் காலங்களில் 'செட்னா' வைப் பற்றி புதுப்புதுத் தகவல்கள் வெளிவரக் கூடும் என வானியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



## முதலை பற்றிய சில தகவல்கள்

முதலைகள் நீரிலும் நிலத்திலும் வாழக் கூடியன. ஆனால் இவை அதிகமாக நீரிலேயே தமது காலத்தைக் கழிக்கின்றன. மீன், தவளை, குருவிகள், பாம்பு போன்றவையே இவற்றின் உணவுகளாகும். இவை 7 மீற்றர் நீளம் அளவில் வளரக் கூடியன.

அதிகூடிய எடையுடைய முதலையின் நிறை 1120 கிலோகிராம்களாகும். 30 தொடக்கம் 80 வரை எண்ணிக்கையளவில் முட்டையிடும் முதலைகள் தமது முட்டைகளை ஓர் இடத்தில் 60 நாட்கள் வரையில் சூரியனின் கடும் வெப்பம் படும் வரையில் வைத்திருக்கும். இதனைத் தொடர்ந்து அவற்றிலிருந்து முதலைக் குஞ்சுகள் வெளிவரும் காலம் கனிகின்றது. இச்சந்தர்ப்பத்தில் அம்முட்டைகளைத் தாய் முதலை மண்ணில் ஒரு குழி தோண்டிப் புதைத்து விடுகின்றது. இதனையடுத்து சில நாட்களில் அந்த முதலைக் குஞ்சுகள் ஒவ்வொன்றாக முட்டையிலிருந்து வெளியேறுகின்றன. இந்தக் குஞ்சுகளை நீருக்குக் கொண்டு செல்லும் தாய் முதலை, முதல் ஒரு வருடத்தில் இவற்றை நீருக்கு பழக்கப்படுத்துகின்றது.

## அடுத்த இதழில்

**புதிய சிறுவர் குறுநாவல் ஆரம்பம்**

பிரபல எழுத்தாளர்

நரசிம்மன்

எழுதும்

**மயானத்தில் தொங்கிய பிணம்**

திகில், மர்மங்கள் நிறைந்த குறுநாவலை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப்ளென்டே



ரெடொல்.்.ப் டீசல்



லெவா ஸோர்

5




# டீசல் என்ஜின் கண்டுபிடிப்பு

நிறைய விஷயங்களைத் தெரிந்தவர் போல் பென்ஸ் அண்ணா பேசிக் கொண்டிருந்தார். கொரல்லா தம்பியோ ஆச்சரியத்துடன் இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தது.

"பென்ஸ் அண்ணா.... அந்த நாட்களில் மின்சாரத்தினால் ஓடிய வாகனங்களும் இருந்த தாமே?" என கொரல்லா தம்பி கேட்டது.

"ஆமாம்... நிறைய இருந்தன. பிரான்ஸ், பிரிட்டன் நாடுகளிலேயே மின்சாரத்தில் ஓடும் கார்கள் இருந்தன. பிரான்ஸ் நாட்டவரான கெஸ்டன் ப்ளென்டே என்பவர் 1865இல் பெற்றரியின் துணையுடன் செலுத்தக் கூடிய காரொன்றைத் தயாரித்திருந்தார். இந்த காருக்கெனத் தயாரித்த பெற்றரியை 1881இல் கெமில் ஃ.போர் என்பவர் மேலும் மெருகூட்டினார். இதனால் இதன் துணையுடன் காரை நீண்ட காலத்திற்கு, நீண்ட தூரத்திற்கு செலுத்தக் கூடிய வசதியைப் பெறமுடிந்தது."

"பென்ஸ் அண்ணா....! அமெரிக்காவில் மின்சாரத்தில் ஓடும் டக்ஸி (வாடகைக்கார்) கார்கள் இருந்தனவாம் தானே....? உங்களுக்கு அது தெரியுமா?"

"ஆமாம்... நான் அதுபற்றி கேள்விப்பட்டுள்ளேன். அமெரிக்காவிலிருந்த ஏ.எல்.ரிக்கர், வில்லியம் மொரிசன் ஆகிய இருவர் ஒரே தடவையில் ஆறுபேர் பயணிக்கக் கூடிய மின்சாரக் காரொன்றைத் தயாரித்தனர். இவற்றிற்கு மூன்று சக்கரங்களே இருந்தன. இவற்றில் அதிகப் பேருக்கு செல்லக் கூடியதாய் இருந்தமையால், வாடகைக்காராக பயன்படுத்துவதற்கு இவை பொருத்தமாக இருக்குமென கருதி இவை வாடகைக் காராக பயன்படுத்தப்பட்டன." என்றது பென்ஸ் அண்ணா.

கொரல்லா தம்பியோ இன்னும் நிறைய விஷயங்களை அறியும் ஆவலில் இருந்தது.

"அண்ணா இந்த கார் தயாரித்தவர்கள் எல்லோரும் முழுக் காரையும் ஒரே தடவையிலா தயாரித்தனர்?"

"இல்லை! எல்லோருமே ஒரே தடவையில் முழுக்காரையும் தயாரிக்கவில்லை. பாகம் பாகமாக இணைத்தே அவர்கள் கார் தயாரித்தனர். ஆனால், பிரான்ஸைச் சேர்ந்த பென்ஹார்ட், லெவாஸோர் எனப்படும் இருவரே இதில் மாற்றத்தை ஏற்படுத்தி, 1889இல் முழுமையாக ஒரே தடவையில் முழுக்காரைத் தயாரித்தனர். இவர்களைத் தொடர்ந்து 1891இல் பர்கோ என்பவரும் முழுமையான காரொன்றைத் தயாரித்தார்.

இந்த இரு தரப்பினர் மாத்திரமே காரின் பாகங்களை ஒரே தடவையில் பொருத்திக் காரொன்றைத் தயாரித்தவர்களாவர்."

"அண்ணா! இந்த பென்ஹாட் என்பவர் கார் தொடர்பாக நிறைய திறமைகளைக் காட்டியுள்ளார் தானே...?"



"நான் அதைத் தான் அன்றும் குறிப்பிட்டேனே... இவர் தான் இன்று பாவனையிலுள்ள கார்களை ஒத்த காரை அன்றைய காலத்திலேயே கண்டுபிடித்த பெருமைக்குரியவராவார். அது மட்டுமல்ல வாகனத்தின் முன்புறமாக, என்ஜினை பொருத்தும் முறையினை அறிமுகப்படுத்தியவரும் இவர்தான். இதற்கு எமில் லொவாஸோர் என்பவரும் உதவினார்"

"பார்க்கப் போனால் காரை இந்தளவிற்கு தயாரித்து எடுப்பதற்கு நிறைய பேர் உதவியிருக்கின்றார்கள் அல்லவா அண்ணா?"

"அது உண்மைதான், நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் எத்தனையோ பேர் கார்



ஃபோர்டின் முதலாவது வாகனம்

தயாரிப்பில் தமது பங்களிப்பை இவ்வாறு செலுத்தியுள்ளனர். அதேபோல் அநேகமானோர் பெரும் பணக்காரர்களாகவும் மாறினர்."

"அது யார்?"

"கார் தயாரித்த அனைவருமே பணக்காரர்களாயினர். அதிலும் ஜோர்ஜ் செல்டன் எனப்படும் நபர் மிக இலகுவாக பணம் சம்பாதித்தார்"

"அது எப்படி...?"

"அவர் றோட் என்ஜின் எனக்கூறி ஒரு



பர்ஜோவின் வாகனம்



லெவா ஸொரின் வாகனம்

வாகனத்தை வரைந்தார். முன்னரும் இதுபற்றி நாம் பேசினோம். இந்த வாகனத்திற்கு 1895இல் பேடன்ட் அனுமதி சான்றிதழ் வழங்கப்பட்டது. இதனால் அமெரிக்காவிலுள்ள வாகன தயாரிப்பாளர்கள் எல்லோருமே தாம் வாகனமொன்றைத் தயாரிக்கும்போது ஜோர்ஜுக்கு பணம் செலுத்த வேண்டியிருந்தது. இதனரல் அவரால் நிறைய பணம் சம்பாதிக்க முடிந்தது."

"பென்ஸ் அண்ணா! நம்மாலும் பணம் சம்பாதிக்க முடியாதா?"

"அது மடத்தனமான ஒரு வேலை. ஜோர்ஜுக்கு எதிராக ஃ.போர்ட் அவர்கள் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். கடைசியில் அந்த வழக்கில் ஜோர்ஜ் தோல்வி கண்டார்."

பென்ஸ் அண்ணா பேசி முடிக்கையில், பெரிய சத்தத்துடன் பெரிய லொறியொன்று சென்றது.

"அண்ணா ஏன் இந்த லொறி இத்தனை சத்தத்துடன் போகின்றது?"

"அது டீசல் என்ஜினில் ஓடுவதால்தான் அப்படி சத்தமாக ஓடுகின்றது."

"டீசல் என்ஜினை செய்தவர் யார் அண்ணா?"

"அதனை ரெடோல்.ஃ.ப் டீசல் என்பவர்தான் தயாரித்தார். அவர் ஆரம்பத்தில் 1896 இல் மாற்றியமைக்கப்பட்ட பெற்றோல் என்ஜின் ஒன்றைக் கண்டுபிடித்தார்.

அது தரம்மிக்கதாக இருந்ததால் டீசலினாலும் இந்த என்ஜினை செலுத்தக் கூடியதாகவும் இருந்தது. இவ்வாறு தான் டீசல் என்ஜினின் வரலாறு ஆரம்பமானது."

"அண்ணா...! அமெரிக்காவில் வாகனம் தயாரித்தவர்கள் ஒரே தடவையில் நிறைய வாகனங்களைத் தயாரித்தார்களா?" என பேச்சினை வேறு திசைக்குத் திருப்பியது கொரல்லா தம்பி.

பென்ஸ் அண்ணன் சிறிது யோசித்துப் பார்த்தது.

"ஆம்...! டூரியே சகோதரர்களின் கார் உற்பத்தி தொழிற்சாலையில் 13 வகையிலான கார்கள் காணப்பட்டன. அந்நாட்களில் இவர்களின் வியாபாரம் ஜாம் ஜாம் என அமோகமாக இருந்தது."

"இப்போது தயாரிப்பதுபோல் நிறைய தயாரித்திருக்கமாட்டார்கள் தானே....?"

"ஆம்! இப்போதுபோல் இல்லைதான். ஆனால், தேவைக்கு ஏற்ற அளவில் தயாரித்தார்கள்"

"அண்ணா! ஃ.போர்ட் அவர்கள் அமெரிக்காவில்தானே இருந்தார்?" என கொரல்லா தம்பி கேள்வி எழுப்பியது.

"ஃ.போர்டைப் பற்றி சொல்வதென்றால் நிறைய உள்ளது. அதுபற்றி வேறொரு நேரத்தில் பேசுவோம். ஆனால் ஒரு விடயத்தை மாத்திரம் கூற வேண்டும். என்னவென்றால், 1896இல் ஃ.போர்ட் அவர்கள் 'குவாட் ரயிஸிக்கிள்' என்றவோர் வாகனத்தைத் தயாரித்தார். அது நான்கு சக்கர சைக்கிளைப் போன்ற வடிவிலேயே காணப்பட்டது. அது ஒரு சிறந்த தயாரிப்பாகவே இருந்தது. 1893இல் ஃ.போர்ட் அவர்கள் தயாரித்த என்ஜினைத்தான் இவர் தனது இந்த வாகனத்திற்கு பயன்படுத்தினார். இந்த வாகனத்தை குறைந்த விலையில் 200 டொலர்களுக்கு விற்பனை செய்த ஃ.போர்ட், புதிய கார்களை தயாரிக்கத் தொடங்கினார்." என்றது பென்ஸ் அண்ணா.

**இன்னும் விடயங்கள் அடுத்த இதழில்.....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆதிவாசிக உலகச்

உலகின் பயணப்பாதையை மாற்றிய மைத்தவர்கள் என்று இனங்காணப் பட்டுள்ள ஆதிவாசிகளுக்காக, வருடத்தில் ஒருநாள் ஒதுக்கப்படுகிறது. இவ்வாறு ஆதிவாசிகளுக்கென ஒதுக்கப் பட்ட தினம் ஆகஸ்ட் மாதம் 9ம் திகதியாகும். அந்த ஒரு நாளில் மட்டுமன்றி அனைத்து நாட்களிலும் நினைவு கூரத்தக்கவர்களாக ஆதிவாசிகள் கருதப்படுகின்றனர்.

## ஆதிவாசிகள் என்பவர்கள் யார்?

ஆதிவாசிகள் என்பவர்கள் தமது தாய் மண்ணை, வேறு ஜாதியினர் கைப்பற்று முன் அப்பிரதேசத்தில் வசித்தவர்களும், அவர்களது பரம்பரையினரும் ஆவர். தற்போதைய நிலையில் அபிவிருத்தியடைந்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் விதத்தில் வசிப்பவர்களாக இவர்கள் இல்லை. தமது மூதாதையர் வாழ்ந்த அதே முறையிலேயே இவர்கள் வசித்து வருகின்றனர். இவர்களது தேவைகளும் பெருமளவில் குறைவாகவே உள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்த உலகில் மனிதர்கள் எவ்வாறு வாழ்ந்தார்களோ! அதேபோல் வசிக்கும் ஆதிவாசிகளும் இப்போது உள்ளனர். அதேவேளை, பழைமையைப் பாதுகாத்துக் கொண்டு, தற்போதைய உலகுக்கு ஏற்றவாறு வசிக்கும் ஆதிவாசிகளும் உள்ளனர்.

## ஆதிவாசிகளின் பொதுவான அம்சங்கள்

உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் ஆதிவாசிகள் பல்வேறு இனங்களைச் சேர்ந்த போதிலும் அவர்களுக்கான பொதுவான ஒற்றுமைகள் உள்ளன. இந்த இனங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய மொழியொன்று உள்ளது. அத்துடன் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பூமிப்பிரதேசம், கலாசாரம் ஆகியவையும் உள்ளன. மற்றொரு குறிப்பிடத்தக்க ஒற்றுமை, ஆதிவாசிகளில் பலர் பிரதான இனத்தவர்கள் கடைப்பிடிக்கும் நடைமுறைகளைப் பின்பற்றுவதில் ஆர்வம் காட்டாமை ஆகும். இதில் நன்கு புலப்படும் ஓர் அம்சம் தான்- எத்தனை திறமை காட்டினாலும் உலகில் பலரது கவனத்தையும் ஈர்க்க முடிந்தாலும் தாம் குறிப்பிட்ட நாட்டின் பிரஜை அல்லது ஆதிவாசிகளின் பரம்பரையில் வருவோர் என்று இவர்கள் கூறிக்கொள்கின்றமையாகும்.

ஆதிவாசிகளிடையே உள்ள மற்றொரு சிறப்பம்சம், அவர்களது பாரம்பரிய அறிவு ஆகும். தற்போது உலகில் பாரம்பரிய அறிவுக்கே அதிக கிராக்கி உள்ளது. இதன் காரணமாகவே ஆதிவாசிகள் தற்போது உலகத்தவர்களின் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. தம்மிடம் உள்ள வளங்களை முறையாகப் பாவித்தல், மருந்து வகைகள், விஞ்ஞான விவசாய நடவடிக்கைகள், பயிர்ச் செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு மூலிகைச் செய்கை மற்றும் பராமரிப்பு, சுகாதாரம், ஆகாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் அடைதல் ஆகிய நடவடிக்கைகளை ஆதிவாசிகள் அவர்களது பாரம்பரிய அறிவின் மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.




## ஆதிவாசிகளின் அறிவு

ஆதிவாசிகள் தற்போதைய நிலைக்கு ஏற்ப எதையும் செய்வது ஆகக் குறைந்த வசதிகளுடனாகும். உதாரணத்திற்கு இலங்கையில் உள்ள ஆதிவாசிகள் இறைச்சியைப் பதப்படுத்தி வைப்பதற்காக உபயோகப்படுத்திய தொழில் நுட்பம் பற்றிப் பார்ப்போம். இந்தத் தொழில்நுட்பம் நாம் தற்போது உபயோகப்படுத்தும் தொழில்நுட்பத்தை விடப் பழைமையானது. எனினும் அதனால் ஏற்படும் பயன் சமமானது. சில நேரங்களில் இது தற்போதைய தொழில் நுட்பத்தைவிட முன்னேறியதாக உள்ளது. இதனால் இந்தக் காலத்தவர்களில் பலர் பழைய தொழில்நுட்பத்தின் ரகசியம் என்னவென்று தேடி வருகின்றனர். அதன்மூலம் தற்காலத்துக்குப் பயன்படக் கூடிய பாடங்கள் என்னவென்றும் ஆராய்ந்து வருகின்றனர்.

எது எவ்வாறெனினும் ஆதிவாசிகளின் அறிவு நீண்டகாலமாக வாய்மொழி மூலமாகவே பரப்பப்பட்டது. இதனால் பல தகவல்கள் தற்போது மறைந்துபோயுள்ளன. அதேபோல் தற்போதைய பரம்பரை ஆதிவாசிகளிடமிருந்து விலகிச் செல்வதும், பல பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாகியுள்ளது. அவர்களது அறிவு வளர்வதற்குத் தேவையான ஒத்துழைப்புக் கிடைக்காமை அதன் வளர்ச்சி தடைப்படுவதற்கு ஒரு காரணமாகும்.

இந்தக் காலத்தவர்கள் பலர் ஆதிவாசிகளின் அறிவைப் பற்றி அக்கறை காட்டுவது அதில் உள்ள பெறுமதியை அறிந்துகொண்டுள்ளதனால் ஆகும். இதற்கு முன் நவீன அறிவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததால் பல்வேறு பிரச்சினைகளுக்குள்ளானதன் காரணமாகவே பலர் ஆதிவாசிகளின் அறிவைப் பற்றி அக்கறை காட்டத் தொடங்கினர். ஆதிவாசிகளின் அறிவைப் பாதுகாப்பதற்கு நாம் எப்போதும் முயற்சிக்க வேண்டும்.

## ஆதிவாசிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள்

உலகில் தற்போது பல நாடுகளில் ஆதிவாசிகளுக்கு நல்ல வரவேற்பு இருந்த போதிலும் முன்னைய காலத்தில் அவர்களுக்கு இவ்வாறன வரவேற்பு இருக்கவில்லை. பல சமயங்களில் அவர்கள் புறக்கணிக்கப்பட்ட பிரிவினராக இருந்தனர். இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் கிழக்காசிய நாடுகளில் பெருமளவில் வசித்து வந்த ஆதிவாசிகள் வெள்ளையர்களின் ஆக்கிரமிப்பை அடுத்துப் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகினர். உலகில் பெருமளவு துன்பங்களுக்கு ஆளாகிய பிரிவினர் என இவர்களைக் கூறலாம்.

ஆதிவாசிகள் பெருமளவில் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினை அவர்களது மொழியைப் பாவிப்பதில் உள்ள சிரமங்களாகும். அத்துடன் அவர்களது கலாசாரங்களை முறையாக பேணுவதிலும் அவர்களுக்குப் பல தடைகள் ஏற்படுகிறது. இயற்கையுடன் நெருங்கி வாழ்வதால் அவர்கள் காடுகளுக்கு அருகில் வசிப்பதைக் காணமுடியும். எனினும் பல்வேறு நாடுகளின் சட்டதிட்டங்களினால் காடுகளுக்கு அருகிலான வசிப்புக்குத் தடைகள் ஏற்படுகின்றன. அத்துடன் அவர்களது இயற்கையான வசிப்பிடங்கள் பறிக்கப்படுகின்றன. எனினும் காடுகளுக்கோ, அங்கு வசிக்கும் மிருகங்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு வாழ்ந்துவரும் ஆதிவாசிகளை காடுகளுக்கு அருகில் இருந்து அப்புறப்படுத்துவது சரியல்ல என்றும் பலர் கூறுகின்றனர்.



நியூசிலாந்து மாலோரி ஆதிவாசிகளின் காவற் கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளின் அறிவு சாத்தாகும்

தற்போதைய சர்வதேச நீதியின்படி ஆதிவாசிகளைப் பாதுகாப்பது மற்றும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது ஆகியவை அவர்கள் வசிக்கும் நாட்டின் அரசாங்கத்தின் பொறுப்பாகும். அவர்களது சமூக மற்றும் தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பும் அந்த அரசாங்கத்துக்கே உண்டு. எனினும் பல நாடுகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளால் அதிக பிரச்சினைகளுக்கு உள்ளாவது ஆதிவாசிகளேயாவர்.

ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொண்டுள்ளதன்படி ஆதிவாதிகளுக்குத் தேவையாயின் பாடசாலைக் கல்வியை வழங்குவது, அவர்களது நலன்களைக் கவனிப்பது ஆகிய அனைத்துப் பொறுப்புகளும் சம்பந்தப்பட்ட நாட்டின் அரசாங்கத்துக்கே உரித்தானது. இவ்வாறான நலன்களைப் பேணும் போதிலும் ஆதிவாசிகளுக்கு எந்த வகையான சட்டங்களையும் இயற்றித் தடைவிதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் கூறப்படுகிறது.

## ஆதிவாசிகளுக்கு உரிய இடம் கிடைத்தமை

1993ஆம் ஆண்டு ஆதிவாசிகளைப் பொறுத்தவரை முக்கியத்துவம் மிகுந்த ஆண்டாகும். அந்த ஆண்டில் தான் சர்வதேச ஆதிவாசிகளின் மாநாடொன்று இடம்பெற்றது.

1993ஐ ஆதிவாசிகளின் ஆண்டாகவும், 1994 முதல் 2004ம் ஆண்டு வரையிலான காலத்தை ஆதிவாசிகளின் தசாப்தமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. 1993இல் இடம்பெற்ற மற்றொரு விசேட அம்சம், மாயா இந்திய ஜாதியைச் சேர்ந்த "மென்பு தும்" என்ற ஆதிவாசி நோபல் பரிசை வென்றதாகும். 1994ல் ஆரம்பமான ஆதிவாசிகளின் தசாப்தத்தில் உள்ள நாம் இந்தக் காலகட்டத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும் ஆதிவாசிகள் தொடர்பாகவும் அவர்களது பாரம்பரிய அறிவைப் பாதுகாப்பது தொடர்பாகவும் அக்கறை காட்ட வேண்டும்.

## உலகில் உள்ள ஆதிவாசிகளின் எண்ணிக்கை

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி உலகளாவிய ரீதியில் மொத்தம் 30 லட்சம் ஆதிவாசிகள் வசிப்பதாகத் தெரியவந்துள்ளது. ஆர்க்டிக் பிரதேசத்தவர்கள், அமெரிக்காவின் சுதேசிகள், அமேசன் காட்டுப் பிரதேசத்தவர்கள் மற்றும் பிக்மிக்கள், அந்தீஸ் மலைப் பிரதேசத்தவர்கள், ஆசியாவில் உள்ள பல்லின பழங்குடிகள், அவுஸ்திரேலியாவின் அப்ரோஜீன் இனத்தவர், நியூசிலாந்தின் மவூரின் இனத்தவர் ஆகியோர் உலகின் பிரசித்தி பெற்ற சுதேச ஆதிவாசிகள் ஆவர். ஆதிவாசிகள் அதிகம் வசிக்கும் நாடாக மலேசியாவைக் குறிப்பிடலாம். இவர்கள் "ஓரங் அஸ்லி' என்று அழைக்கப்படுகின்றனர். செனோய், நெக்ரிவோ மற்றும் மலே ஆகிய பிரிவுகளில் ஒரு பிரிவுக்கு ஆறு வகையினர் என்ற ரீதியில் 18 மக்கள் பிரிவினர் மலேசியாவில் வசிக்கின்றனர். கனடா மற்றும் அமெரிக்காவில் 667 ஆதிவாசி மக்கள் பிரிவுகளும், வியட்நாமில் 54 ஆதிவாசி மக்கள் பிரிவுகளும் வசிப்பதாகக் கூறப்படுகிறது.

உலகில் முன்னணிக்கு வந்துள்ள ஆதிவாசிகளில் அவுஸ்திரேலியாவின் அபோரிஜின் மற்றும் ஐரோப்பாவில் (சுவீடன், நோர்வே, ரஷ்யா, பின்லாந்து) வசிக்கும் சாம் பழங்குடிகள் குறிப்பிடத்தக்கவர்கள். சாம் பழங்குடிகள் தற்போது தமக்கென ஒரு கொடியையும் அமைத்துக் கொண்டுள்ளனர். அபோரிஜின்கள் தமது திறமையை ஏற்கனவே உலகுக்குப் பறைசாற்றியுள்ளனர்.

## இலங்கையின் ஆதிவாசிகள்

இலங்கையின் ஆதிவாசிகள் எனும் போது சாதாரணமாக வேடர்களையே குறிப்பிடுவதுண்டு. எனினும் வேடர்களின் பூர்வீகம் என்ன என்பது பற்றிய தெளிவான விளக்கத்தை இன்னும் பெற முடியாமல் உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் காட்டுக்கு அனுப்பப்பட்ட ஒரு பிரிவினரின் மூலமே வேடர்கள் உருவாகியதாக ஒரு சாரார் நம்புகின்றனர். மற்றும் ஒரு சாரார் குவேனியின் பிள்ளைகளின் பரம்பரையில் வந்தவர்களே வேடர்கள் என்று கூறுகின்றனர். சாட்சிகள் எதுவும் இன்றி வாய்மொழிக் கதைகளாலேயே இந்தக் கருத்துக்கள் உருவாகியுள்ளன. எங்கள் நாட்டில் வேடர்கள் என்று இனங்காணப்பட்டவர்கள் பல பிரிவுகளாகக் காணப்படுகின்றனர். எனினும் இவர்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மக்கள் பிரிவுகளா? என்பதற்கு பதில் கிடைக்காத கேள்வியாக உள்ளது. இந்நிலையில் வேடர்கள் உண்மையிலேயே ஆதிவாசிகள் தானா? என்பது தற்போது ஆராயப்பட்டு வருகிறது. இளவரசர் விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன் இங்கிருந்த யக்ஸ, ராக்ஸ, நாக மற்றும் தேவ பிரிவினரின் பரம்பரையினர் இந்த நாட்டின் உண்மையான ஆதிவாசிகள் என்று ஒரு சாரார் நம்புகின்றனர்.



## ஐக்கிய நாடுகள் ஏற்றுகொண்டுள்ள ஆதிவாசிகளுக்கான உரிமைகள்

- சர்வதேச சட்டத்தின்படி ஆதிவாசிகளுக்கு அவர்களைப் பற்றிய தீர்மானத்தை எடுக்கும் உரிமை அவர்களுக்கே உண்டு. அவசியமானால் தாம் வசிக்கும் பிரதேசத்தில் சுயாட்சி நடத்தலாம். ஆனால் இதனைத் தவறான விதத்தில் அர்த்தமாக்கிக் கொள்ளக் கூடாது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படும் அனைத்து மனித உரிமைகளும் ஆதிவாசிகளுக்கு உரித்துடையவை.
- கௌரவம் பெறுவதற்கும் அநீதிக்கு அடிமைப்படாமல் இருக்கும் உரிமையும் அவர்களுக்கு உண்டு.
- தனியொரு மக்கள் பிரிவாகப் பாதுகாப்பாக வசிக்கவும், மனித அழிவில் இருந்து பாதுகாப்புப் பெறவும், ஆதிவாசிகளுக்கு உரிமையுண்டு. தனிப்பட்ட வாழ்க்கைக்கான உரிமை, மன மற்றும் உடல் ரீதியான சுகாதாரத்துக்கான உரிமை, சுதந்திர, மற்றும் தற்பாதுகாப்பு உரிமை என்பனவும் ஆதிவாசிகளுக்கு இருக்கிறது.
- தமது கலாசாரத்தைப் பேணும் உரிமை, மற்றும் அதனைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை உண்டு.
- தமக்கு உரிய சமயச் சடங்குகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுடன் உற்சவங்களை மேற்கொள்ளவும், உற்சவங்களுக்கான உபகரணங்களைப் பாவிக்கவும் ஆதிவாசிகளுக்கு உரிமை உண்டு.
- மொழி மற்றும் எழுத்து வடிவம், இலக்கியம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளவும், உபயோகப்படுத்தவும் முடியும்.
- மற்றையோருடன் சேர்ந்து பழகும் மற்றும் கல்வி கற்கும் உரிமை உண்டு.
- அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மற்றும் தெய்வ நம்பிக்கையை அபிவிருத்தியை சுதந்திரமாக மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்பத்தை நடத்திச் செல்லும் உரிமை உண்டு.
- தமது பாரம்பரிய பூமிப் பிரதேசத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் சூழலுடனான தொடர்பை மேற்கொள்ளவும் அவர்களுக்கு உரிமை உண்டு.
- இவை தவிர மற்றும் பல உரிமைகள் ஐக்கிய நாடுகள் சபையின் வெளியீட்டில் இடம்பெற்றுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியற் கலசம்

அநு.வை. நாகராஜன்



அன்புச் செல்வங்களே,
கடந்த இதழ்களில் எமது அறிவியற் கலசத்தில் இருந்து, இரண்டு அமுதப் பருக்கைகளைச் சுவைத்தோம். இது மூன்றாவது பருக்கை. வித்தியாசமான முறையில் உங்கள் முன்வைக்கப் பெறுகிறது. எங்கள் வீட்டுத் தோட்ட வேலியில், நீங்கள் காணும் ஒரு வகை ஓணான் பற்றியது, இது. இந்த ஓணான் அடிக்கடி நிறம் மாறிக் காட்சி கொடுக்கும். இதனைப் பச்சோந்தி என்று அழைப்போம். இது ஏன்? எப்படி நிறம் மாறிக்கொள்ளுகிறது? என்று எங்கள் கண்ணனும் கமலியும் இங்கு உரையாடிக் கொள்கிறார்கள். அவர்கள் என்ன உரையாடுகிறார்கள் என்று கேட்போமா?
சரி. கேளுங்கள்!

– அநு.வை.நா.

## கணத்துக்குக் கணம் நிறம் மாறும் பச்சோந்தி



பருக்கை : 03

கமலி : கண்ணன் அண்ணா! இன்று நான் எங்கள் பின் வளவு, வேலியில் ஓர் அதிசயப் பிராணியைக் கண்டேன் அண்ணா!

கண்ணன் : அதிசயப் பிராணியா? அது என்ன கமலி?

கமலி : ஆம் அண்ணா. வீட்டுப் பல்லி போன்ற ஓர் அதிசயப் பிராணி தான் அது. என்னைக் கண்டதும், வேலியில் இருந்து கொய்யா மரக் கிளைக்குள் ஓடி மறைந்தது. ஓடி மறைந்தது அதிசயம் இல்லை. ஆனால், முதலில் அது மங்கலாகத் தெரிந்து, சற்று நேரத்துள் சிறுகச் சிறுக நிறம் மாறி, கடும் பச்சை நிறமாக மாறி, தலையை ஆட்டி ஆட்டிக் கொண்டிருந்தது.

கண்ணன் : கமலி! நீ கண்டது பல்லி அல்ல. அது ஓர் ஓணான். அடிக்கடி சூழலுக்குத் தக்கபடி



நிறம் மாறும் ஓணான் தான் அது! அதனைப் பச்சோந்தி என்று அழைப்போம். எல்லா ஓணான் களும் இப்படி நிறம் மாறுவதில்லை. பச்சோந்தி மட்டுமே இப்படி கணத்துக்குக் கணம் நிறம் மாறும்.

கமலி : அது ஏன் அண்ணா? அதை விளக்கமாகச் சொல்லுங்கள் அண்ணா.

கண்ணன் : சொல்லுகிறேன். கேள்.......
ஓணான்களிற் பல வகைகள் உண்டு. அவற்றுள் ஒரு வகைதான் இந்த ஓந்தி. இது தனது சூழலுக்கும் உணர்வுகளுக்கும் தக்கபடி அடிக்கடி நிறம்மாறிக் கொள்ளுகிறது.

இது இயற்கை தரும் ஒரு விநோதம்! பொதுவாக - ஓந்திகள் மிகவும் மங்கலான நிறமாகத்தான் இருக்கும். அதாவது. 'டல்' (Dull) ஆக இருக்கும். ஆனால், சுற்றுச் சூழலின் தட்ப-வெப்ப சீதோஷணத்துக்கு ஏற்ற படியும் உடம்பின் உணர்வு களுக்கு ஏற்றபடியும் அவை நிறம் மாறும். இவ்வேளைகளில் அவை இளம் பச்சை நிறத்தில் இருந்து கடும் பச்சை நிறமாக உருமாறிக் காட்சி தரும். மரஞ்செடி கொடிகளுக்குள் வாழும் ஓந்திகள் மற்றைய ஓணான்களைப் போல் ஒன்றாக இருந்தாலும் நிறத்திலும் உடலுறுப்பிலும் சற்று வேறு பட்டதாகவே இருக்கும். தலையுடன் நான்கு கால்களுடன் இருக்கும் ஓந்தியின் வால். இடுப்பில் இருந்து சிறிது சிறிதாக நீண்டு, ஊசி போல் கூராக இருக்கும். அதன் இடுப்பு வரையிலான உடம்பில் மூன்றில் இரண்டு மடங்கு நீண்டு இருக்கும். அது ஏறக்குறைய ஒன்றரை அடி வரை நீண்டிருக்கும். கழுத்தில் இருந்து வால் நுனி வரை மேலிருந்து கீழாக வெள்ளைக் கோடுகள் தனித் தனியாக இருக்கும். ஓந்தி ஓர் ஊன் உண்ணிப் பிராணி.

தான் உண்ணும் பூச்சி, வண்டு போன்ற சிற்றுயிர்களைத் தன் நாவால் எட்டிப் பிடித்து, வாய்க்குள் எடுத்து மென்று விழுங்கும். மற்றைய ஓணான்களைப் போல் உடலுறவு கொண்டு மணற்பாங்கான நிலத்திற் குழி தோண்டி முட்டை இட்டுத் தம் இனத்தைப் பெருக்கும். சூரிய வெப்பத்தால் முட்டைகள் பொரிக்கும். முட்டையில் இருந்து வெளிவரும் ஓந்திக் குஞ்சுகள் எறும்புகளின் முட்டைகளை, குறிப்பாக முசுறு என்னும் எறும்புகளின் முட்டைகளையும் சின்னஞ் சிறிய பூச்சிகளையும் தாமே பிடித்து உண்ணும். நாளடைவில் வளர்ந்த ஓந்திகள் தமக்கு ஏற்ற பெரிய பூச்சிகள், வண்டுகளை - குறிப்பாகத் தத்து வண்டு, வெட்டுக்கிளி போன்ற சிற்றுயிர்களைப் பிடித்து தமது இரையாக உட்கொள்ளும். இவற்றை மறைந்து இருந்து, இலாவகமாகத் தம் நாவை நீட்டிப் பிடித்து, இரை கொள்ளும்.

கமலி : வேடிக்கையான பிராணி!

கண்ணன் : வேடிக்கை மட்டுமல்ல. விவேகமானதும் தான்!
இன்னும் கூறுகிறேன், கமலி.
ஓந்திகள் பொதுவாக சூழ லால் உணர்ச்சி வசப்படுவதும் உண்டு. சில வேளைகளில், ஒரு பச்சோந்தி இன்னுமொரு பச்சோந்தியை நேருக்கு நேர் சந்திக்கும் போது உணர்ச்சிக்கு உள்ளாகி ஒன்றை ஒன்று மோதிக் கொள்ளும். அப்போது, அதன் உடலில் மாற்றங்கள் நிகழும். முதுகில் உள்ள செதில்கள் கிளர்ந்தெழுந்து குத்திட்டு நிற்கும். அதேநேரம், அது எழும்பி நின்று ஆக்ரோசமாகவும், சிலிர்த்தும் ஒன்றை ஒன்று மோதிக் கொள்ளவும் செய்யும். பலம் குறைந்த நோஞ்சான் ஓந்தி, தன் எதிராளி வெற்றிகொள்ள இடம்விட்டு ஒதுங்கவும் செய்யும். சில வேளைகளில், அவை ஒன்றை ஒன்று கொஞ்சிக் குலாவுவதும் உண்டு. இவ்விதம், உணர்ச்சி வசப்படும் போதும், உறவு கொள்ளும் போதும் அவை நிறம் மாறிக் கொள்ளும்.

கமலி : பச்சோந்தி அவ்விதம் நிறம் மாறும் போது ஏற்படும் உடல் மாற்றத்தின் அறிவியற் கருத்தென்ன அண்ணா?

கண்ணன் : பச்சோந்தியின் நிற மாற்றத்துக்கு காரணமாக இருப்பது, அதன் நரம்பு மண்டலத்தில் இருக்கும் 'ஹோமோன்'களின் இரசாயன மாற்றமேதான். அதாவது, பச்சோந்தியின் சருமத்துக்கு இடையில் இருக்கும் 'பிக்மெண்ட்' (Pigment) எனப்படும் நிறவுருக் கலன்கள் புறச் சூழல் நிலையில் உணர்வுகளால் தூண்டற் பெறுதலாம். அதன் பேரில் இரசாயன மாற்றம் ஏற்பட்டு நிறக் கலவை மாற்றம் வெளிப்படும். இதற்கு, சூழலின் தட்ப-வெப்பமும் துணை செய்யும்.

கமலி : சுவையான தகவல்கள் அண்ணா. மெத்த நன்றி.





### புதிர்க் கவிதை விடைகள்

1. கயிர் பாலம்
2. பென்சில்
3. மூக்குக்கண்ணாடி
4. கிராமபோன்
5. கசை
6. தொலைக்காட்சி
7. ஆணி
8. கொல்லன் குரடு
9. மத்தளம்
10. டோர்ச்லைட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய விடயங்கள் பற்றி அறியும் ஆர்வம் எம்மிடம் அதிகமாகவே இருக்கின்றது. அதற்காக உள்ள வழிகளில் வரலாற்று நூல்கள், கல்வெட்டுக்கள் என்பன முக்கிய இடம்பெறுகின்றன. இருந்தபோதும் பண்டைய காலம் பற்றிய தகவல்கள் வரலாற்று நூல்களில் வரையறுக்கப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன.

# இரத்தினபுரி, பலாங்கொடை புவிச்சரிதவியல் ஆய்வுகள் வெளிப்படுத்தும் அதிர்ச்சி தரும் தகவல்கள்!

## விஷேட சூழல் நிலவரம்

உதாரணமாகக் குறிப்பிடுவதாயின் விஜயன் இலங்கைக்கு வந்ததில் இருந்தான மட்டுப்படுத்தப்பட்ட வரலாறே வரலாற்று நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதனோடு தொடர்புபட்ட நிகழ்வுகள், விடயங்களே எம்மால் அறியக் கூடியதாக உள்ளன. இருந்த போதும் அதற்கும் நீண்ட காலப் பகுதிக்கு முன்னால் இருந்தே இலங்கையில் மனிதர்கள் வாழந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இங்கு தரப்பட்ட தகவல்கள் அப்படியான விடயங்களை உள்ளடக்கியதாகும்.



எமது நாட்டில் மனிதர்கள் வாழ்ந்திருப்பதற்கான ஆதாரங்கள் 125,000 வருடங்கள் (ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம்) வரை நீண்டு செல்கின்றன. இவ்வாறாகப் பார்க்கும்போது இரண்டு மில்லியன் (20 இலட்சம்) வருடங்களுக்குள் இலங்கையில் பல்வேறு சுற்றாடல் நிலைமைகள் காணப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இதற்கு 20 இலட்சம் வருடங்களுக்கு முன்னால் பூமியின் மேற்பரப்புக் கடுமையான குளிர்ச்சி நிலைக்கு உள்ளாகியது. வடதுருவம், தென்துருவம் ஆகிய பகுதிகளின் பிரதேசங்கள்,கடினமான பனிப்பாறைகளால் சூழப்பட்டுவிட்டன. இவ்வாறான நிலையில் பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள நாடுகளில் கடும் மழை மிகுந்த காலநிலை ஏற்பட்டது.

தொடர்ச்சியாக இந்த நாடுகளுக்கு நீண்ட காலமாக மழை பெய்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். வருடக்கணக்கில் இவ்வாறு மழை பெய்திருக்கக் கூடும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும். அதன் காரணமாக மண் அரிப்பு ஏற்பட்டது. எமது நாட்டிலும் நில அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய விதமாக இந்த மண் அரிப்பு நிகழ்ந்திருக்கலாம்.

இதனால் எமது நாடு புவி அமைப்பு ரீதியாகச் சில மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கலாம். அவ்வாறான சில மாற்றங்களை இரத்தினபுரி மாவட்டத்தில் காணலாம். இரத்தினபுரியில் இருந்து பலாங்கொடை நோக்கிப் பிரயாணம் செய்யும் போது பாதையின் இரு மருங்கிலும் காணப்படுகின்ற மலைகள் பள்ளத்தாக்குகள், வளைவுகள் என்பன இவ்வாறான பாரிய மண் அரிப்பால் உருவானவை. இவ்வாறு அரிப்புக்குள்ளான மண் தாழ் நிலங்களில் தேங்கியது.

## இரத்தினக் கற்பாறை

இவ்வாறு மண் அடித்துச் செல்லப்பட்ட போது மலைகளில் காணப்பட்ட பெறுமதிமிக்க இரத்தினக் கற்கள் தாழ் நிலப் பள்ளத்தாக்குகளில் அடையல் செய்யப்பட்டன. இன்று இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, பெல்மடுல்லப் பிரதேசங்களில் "இல்லம்" என்ற பெயரில் அகழ்ந்து எடுக்கப்படுகின்ற இரத்தினக்கல் படிவ, மண் படிவு இவையே.

இதில் இரத்தினபுரியில் இரத்தினக்கல் அகழ்வின்போது கண்டுபிடிக்கப்படுகின்றவை மட்டும் முக்கியமானதல்ல. இந்த இரத்தினக் கல் படிவு அமைந்துள்ள இடங்களில் பண்டைய காலத்திற்குரிய மிருக எலும்புக்கூடுகள், பண்டைய மனிதர்கள் பயன்படுத்திய கல் ஆயுதங்கள் உபகரணங்கள் என்பனவும் காணப்படுவதாகப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பண்டைய இலட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டு சுற்றாடலில் மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் ஓரளவுக்காவது கிடைப்பதால், இத்தகவல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இரத்தினபுரியில் இரத்தினக் கல் அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் (மிருக) பற்றி முதன்முதல் ஆய்வு நடத்தியவர் பீ.ஈ.பி.தரணியகல என்ற புதைபொருள் மற்றும் மானிட ஆய்வாளராவர். அவருக்குப் பின்னர் கிரான் தரணியகல என்பவர் இதுபற்றி ஆய்வு நடத்தினார்.

இவ்வாறு இரத்தினபுரிப் பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் 48000 வருடங்கள் அளவில் பழைமை வாய்ந்தவை என்று ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் இந்தளவு காலப்பகுதிக்குரிய சுற்றாடல், தாவரங்கள், மிருகங்கள் பற்றிய நிலைப்பாட்டிற்கு வரவும், தகவல்களைப் பெறவும் முடிந்திருக்கின்றது.

இந்த ஆய்வில் முக்கியத்துவம் பெறுவது, எமது நாட்டில் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த நீர் யானைகள் பற்றிய தகவல்கள் முக்கியத்துவம் பெறுகின்றதென்பதேயாகும். அதில் ஒரு நீர் யானை "எலிபாஸ் ஹுய்சடரிகல்" (Elephas Hysudricus) என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது.

## அழிந்துபோன நீர்யானை இனம்

மற்றைய யானை இனம் உயிரியல் பெயருக்கமைய "எலிபாஸ் நமடிகஸ்" (Elephas Namadicus) என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. இந்த யானைகள் இரண்டும் எமது தாழ் நிலப்பகுதிகளில் 50000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தவை என்றும் பின்னர் அவை அழிவுக்குள்ளான இனம் என்றும் கருதப்படுகின்றது.


## அன்று இருந்தவையும் - இன்று இல்லாதவையுமான மிருகங்கள்

இரத்தினபுரி, இரத்தினக் கல் அகழ்வுகளின் போது இலங்கையில் இருந்து அருகிப்போன "ஹிப பொருட்மஸ்" விலங்கின் எலும்புக் கூடுஒன்றும் கண்டுப்பிடிக் கப்பட்டிருக்கிறது. விஞ்ஞானிகள் அந்த விலங்கை "ஹெக்ஸ்புரடரோன் கிங்ஹலேயஸ்' '(Hexoprotodon sinhaleyus) என்று பெயரிட்டனர். அதே போன்று ரய்னோசிரஸ் (Rhinoceros Sinlaleyus)என்ற மிருகமும் எமது தாழ் நிலப்பிரதேசங்களில் வாழ்ந்து, அருகிப்போன மிருகமாகும். இவ்வாறு இரத்தினபுரியில் இரத்தினக் கற்கள் அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட அடையாளம் காணப்பட்டுள்ள எலும்புக் கூடுகளுக்குரிய சில மிருகங்களின் பெயர்கள் வருமாறு:

1. Leo Leo என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற சிங்கம்.
2. குஓன் ஜாவானிகஸ் Cuon Javanicus என்ற சிவப்பு நாய் இனம்.
3. பிபோஸ் கவுரஸ் (Bibos Gaurus)
4. சூஸ் சிங்ஹலேயாஸ் (Sus Sinhaleyus)
5. ஹிஸ்ரிக்ஸ் ஸிவலென்சிஸ் (Hystrix sivalensis) என்ற முள்ளம் பன்றி இனம்.
6. அக்சிஸ் அக்சிஸ் சிலோனென்சிஸ் (Axis Axis Ceylonensis) என்ற புள்ளி மான் இனம்.

## தாவர இனம்

மிருகங்கள் பற்றிய தகவல்களைப் போன்று தாவரங்கள் பற்றிய தகவல்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. கடந்த 12,000 வருடங்களுக்குட்பட்ட காலப்பகுதிக்குரிய தாவரங்கள், மூலிகைகள் பற்றிய தகவல்கள் புதைபொருள் ஆராய்ச்சித் தகவல்கள் மூலம் வெளியாகி உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படும் நாடு : ஸ்லோவேனியா குடியரசு
கண்டம் : ஐரோப்பா
வலயம் : வடகிழக்கு ஐரோப்பா
எல்லைகள் : போல்கன் குடாநாட்டில் அமைந்திருக்கும் ஸ்லோவேனியா வடக்கில் ஒஸ்ரியா நாட்டையும், வடகிழக்கே ஹங்கேரி நாட்டையும், தெற்கில் குரைசியாவையும், மேற்கே இத்தாலி என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.




# ஸ்லோவேனியா

## தரைத் தோற்றம்

மலைப் பிரதேசங்களைக் கொண்ட ஸ்லோவேனியாவின் வடபகுதி மலைகளால் நிரம்பப்பெற்றது. மேற்குப் பிரதேசத்தில் காடுகள் அதிகமுண்டு. கிழக்குப் பகுதியின் 1/3 (மூன்றிலொரு) பகுதி சுண்ணக்கற்களைக் கொண்ட நிலப்பிரதேசமாக உள்ளது. இதனைக் 'கா்டிஸ்' என்று அழைப்பர். நாட்டின் மிகவுயர்ந்த மலையாக "டிரிக்லவ்" காணப்படுகின்றது. இது 2,863 மீற்றர் உயரமானது. இம்மலையானது அல்ப்ஸ் மலையின் தொடர்ச்சியாகும்.

முரா, டிராவா மற்றும் றூவா என்பவை நாட்டின் பிரதான நதிகளாகும். இந்நதிகள் வடகிழக்கை நோக்கிப் பாய்ந்து செல்கின்றன. இந்நாட்டின் தென் மேற்குத் திசை குறைந்த நீளம் கொண்ட கடற்பிரதேசத்தைக் கொண்டது. இக்கடற்பிரதேசம் 32 கிலோமீற்றர் நீளமுடையது. இக்கடற் பிரதேசம் வெனிஸ் குடாவிற்கு அருகில் அமைந்துள்ளது.

## காலநிலை

நாட்டின் கரைப்பிரதேசங்களிற்கு அருகில் சமுத்திரக் காலநிலை காணப்படுகின்றது. ஆனால் மலைப்பிரதேசங்களை நோக்கிச் செல்லச் செல்ல காலநிலை வேறுபடுகின்றது. மலைப்பிரதேசங்களில் குளிர் அதிகமாகக் காணப்படுகின்றது. பனி வீழ்ந்து கொண்டே இருக்கும். பனிக்காலங்களில் மழைவீழ்ச்சியும் அதிகமாக இருக்கும். கிழக்கு வலயங்களில், மலைச் சரிவுப் பகுதிகளில் சமமான காலநிலை காணப்படுகின்றது. பனிக்காலத்தில் குளிரும் அதிகமாக உள்ளது.

## தாவரங்கள்

வேறெந்த நாட்டிலும் காணமுடியாத விசேட வகைத் தாவரங்களை ஸ்லோவேனியா நாட்டில்



காணலாம். இவற்றில் லின்டென் வகைத் தாவரங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. இதனை விட மலைப் பிரதேசங்களில் அல்ப்ஸ் இலட்சணங்களைக் கொண்ட தாவரங்களைக் காணலாம்.


சாமோயிஸ் என்றழைக்கப்படும் மானினங்களை நாடு முழுவதிலும் அதிகமாகக் காணலாம். இவ் மானினங்கள் நாட்டின் இலச்சினையாகக் கருதப்படுகின்றன.

## இயற்கை வளங்கள்

ஸ்லோவேனியா நாட்டில் பரவலாக நிலக்கரி படிவுகளைக் காணலாம். இவற்றை விடச் செம்பு, நிக்கல், யுரேனியம், வெள்ளி, போன்றவை இங்கு உண்டு. மேலும் பெற்றோலியம், இயற்கை வாயு என்பவற்றையும் இந்நாடு கொண்டுள்ளது.

## சனத்தொகை

ஸ்லோவேனியா நாட்டில் அதிகமாக வாழ்பவர்கள் சுதேசிகளான ஸ்லோவேனியரே. இவர்கள் ஸ்லோவிக் இன மக்களைச் சார்ந்தவர்கள். இவர்களின் கலாசாரத்தில் ஒஸ்ரியா மற்றும் ஜேர்மன் நாட்டு மக்களின் கலாசாரத்தின் செல்வாக்குக் காணப்படுகின்றது. பல தசாப்தங்களுக்கு மேலாக இந்நாடுகள் மேற்கூறிய நாடுகளுக்கண்மையில் காணப்பட்டதன் விளைவாக இந்நிலை ஏற்பட்டுள்ளது.




### சனத்தொகை விபரம்

மொத்தச் சனத்தொகை : 1,932,917
0இற்கும் 14 வயதிற்கும் இடையில் உள்ளோர் - 15.7% வீதத்தினர்
14இற்கும் 64 வயதிற்கும் இடையில் உள்ளோர் - 69.8% வீதத்தினர்
65 வயதிற்கு மேற்பட்டவர்கள் -14.5%வீதம்
சனத்தொகை வளர்ச்சி வேகம் -0.14%வீதம்
ஆண், பெண் விகிதம் -பெண் 1 :ஆண்0.96
பிறக்கும்போது ஆயுள் எதிர்பார்ப்பு - 75.29வருடங்கள்

இனங்கள் :

ஸ்லோவேனியர் -88%
குரைசியர் - 3%
சேர்பியன்ஸ் - 2%
பொஸ்னியர் - 1%
நகரச் ச[illegible]த்தொகை- 49%

## மதமும் மொழியும்

அரசின் மொழியாக அமைவது ஸ்லோவேனியா மொழியாகும். 91% வீதத்தினர் இம்மொழியைப் பயன்படுத்துகின்றனர். சர்போ மற்றும் குரைசியா மொழிகளை 6% வீதத்தினர் மட்டும் பயன்படுத்துகின்றனர். ஸ்லோவேனியா மொழியை லத்தீன் எழுத்துக்களைப் பயன்படுத்தியே எழுதுகின்றனர்.

நாட்டின் பிரதான மதமாக உரோமன் கத்தோலிக்க மதம் உள்ளது. நாட்டின் மொத்தச் சனத் தொகையில் 70.8% வீதத்தினர் இதனைப் பின்பற்றுகின்றனர். இம்மதத்தை விட உள்ளூர் மதப் பிரிவுகளை 22% வீதத்தினர் பின்பற்றுகின்றனர். மேலும் இஸ்லாமியர், லூதர் ஆகியோரது மதங்களைப் பின்பற்றுவர்களும் உண்டு.

## பிரதான நகரங்கள்

நாட்டின் பிரதான நகராகப் புரொப்ஜானா நகர் உள்ளது. இங்கு 258,960 பேர் வாழ்கின்றனர். மாரிபோர் இன்னுமொரு பிரதான நகரமாகும். இங்கு ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். அல்பைன் அருகிலுள்ள கிராமங்களிலேயே அதிக எண்ணிக்கையான மக்கள் வாழ்கின்றனர்.

## கல்வி

7 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட சகல பிள்ளைகளும் கட்டாயமாகப் பாடசாலைக் கல்வியைப் பெறவேண்டும் என்பது ஸ்லோவேனியா நாட்டுச் சட்டமாகும். இன்று வரைக்கும் எழுத வாசிக்கத் தெரிந்தோர் 99% வீதத்தினராக உள்ளனர். கல்வி கற்பவர்களுள் 53% வீதத்தினர் உயர் கல்வியைக் கற்கின்றனர்.

## பொருளாதாரம்

சுதந்திரமடைவதற்கு முன்பு இந்நாடு யூகோஸ்லாவியாவிற்குச் சொந்தமாக இருந்த 6 நாடுகளில் ஒன்றாக இருந்தது. 1990 ஆண்டின் மத்தியில் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவாக மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சியைக் கண்டது. வியாபாரம் மற்றும் உல்லாசப் பிரயாணத் தொழில் இதன் விளைவாக பாதிப்புற்றது. இதனைத் தொடர்ந்து தனியார் மயப்படுத்தலின் காரணமாக வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் அண்மையிலேயே கட்டியெழுப்பப்பட்டது.

## நிர்வாகம்

1991ம் ஆண்டின் பின் ஏற்பட்ட சனநாயக ஆட்சிமுறையின் பின் மனித உரிமைகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்ட அரசியலமைப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று வரைக்கும் இந்த அரசியலமைப்பே நடைமுறையில் உள்ளது. ஸ்லோவேனியா பாராளுமன்றத்தின் அங்கத்தவர்களின் தொகை 90ஆக உள்ளது. இவர்களுடன் 40 சபா அங்கத்தவர்களும் உள்ளனர். பாராளுமன்றத்தின் தலைவராகப் பிரதம மந்திரி இருப்பார். இவர் 4 வருடங்களுக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படுவார். ஜனாதிபதி மக்கள் வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்படுவார். ஆனாலும் பிரதமரே நிறைவேற்று அதிகாரமுள்ளவராக இருப்பார்.

## பாதுகாப்பு

நாட்டிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் 7 மாத காலம் கட்டாயம் இராணுவ சேவையில் ஈடுபடவேண்டும். இற்றை வரைக்கும் 9000 இராணுவ வீரர்கள் சேவையில் உள்ளனர்.8 பிரதான நீதிமன்றங்கள் உள்ளன. இதில் உயர்நீதிமன்றம் பிரதான நீதிமன்றமாகும். 4 மேன்முறையீட்டு நீதிமன்றங்களும் செயற்பட்டு வருகின்றன.



## ஸ்லோவேனியாவின் பொருளாதார நிலவரங்கள்

| | | |
|---|---|---|
| தேறிய உள்நாட்டு உற்பத்தி | - | 36 பில்லியன் டொலர் (2002) |
| தேறிய உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் | - | 3% |
| ஒருவர் பெறக்கூடிய ஆகக்கூடிய வருமானம் | - | 18,000 டொலர் |
| ஊழியர் படை | - | 357,400 பேர் |
| வேலையற்றோர் வீதம் | - | 11% |
| கைத்தொழில்கள் | - | அலுமினியம், விவசாய உபகரணங்கள், ஈயம், மற்றும் துத்த நாகம், இலத்திரனியல் உபகரணங்கள் |
| கைத்தொழில் வளர்ச்சி வேகம் | - | 2.4% வீதம் |
| விவசாய உற்பத்திகள் | - | உருளைக்கிழங்கு, ஹொப்ஸ், கோதுமை, பீட், திராட்சை, விலங்கு வளர்ப்பு, ஓட்ஸ். |
| ஏற்றுமதி | - | 10.3 பில்லியன் டொலர் |
| ஏற்றுமதிப் பண்டங்கள் | - | முடிவுப் பொருட்கள் போக்குவரத்து இயந்திர சாதனங்களின் உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் |
| ஏற்றுமதிக்காக அனுப்பப்படும் நாடுகள் | - | ஜேர்மனி, இத்தாலி, குரைசியா, அவஸ்திரேலியா |
| இறக்குமதி | - | 11.1 பில்லியன் டொலர் |
| இறக்குமதி செய்யும் நாடுகள் | - | ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், ஒஸ்ரியா |
| நாணயம் | - | (SIT) டொலர் |

- எஸ்.கிரேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபர்ணிக்காவின் நாய்க்குட்டிகள்

அபர்ணிக்காவின் வீட்டில் நான்கு நாய்க் குட்டிகள் உள்ளன. அந்த நாய்க்குட்டிகள் மிகவும் அழகானவை. அபர்ணிக்கா ஒவ் வொரு நாளும் மாலை நேரங்களில் நாய்க் குட்டிகளுடன் விளையாடுவாள். அபர்ணிக்கா பந்தை எடுத்து வீசுவாள். நாய்க்குட்டிகள் காலால் தட்டிவிடும்.

இரவு ஆனதும் அபர்ணிக்கா நித்திரை கொள்வதற்குச் சென்றுவிடுவாள். காலையில் நாய்க்குட்டிகள் அபர்ணிக்காவை அழைக் கும். அவற்றின் குரல் கேட்டதும், அபர்ணிக் கா உற்சாகத்துடன் எழுந்து வருவாள். அம்மா பால் கரைத்துக் கொடுப்பாள். அபர் ணிக்கா தட்டிலே பாலை ஊற்றி நாய்க் குட்டிகளுக்கு வைப்பாள். அவை ஆவலுடன் பாலைக் குடிக்கும்.

அபர்ணிக்கா பாடசாலை செல்லும்போது நாய்க்குட்டிகளும் கொஞ்சத் தூரம் துணை யாகச் செல்லும். பின்னர் வீடு திரும்பிவிடும். அபர்ணிக்கா பாடசாலை விட்டு வீடு திரும்பும்வரை நாய்க்குட்டிகள் காத்திருக்கும்.

அபர்ணிக்கா வந்ததும் நாய்க்குட்டிகள் மகிழ்ச்சியில் வாலை ஆட்டிக்கொண்டு ஓடி வரும். அவளது காலடியில் சுற்றிக் கொண்டு நிற்கும். அபர்ணிக்கா நாய்க்குட்டிகளை அணைத்து முத்தம் கொடுப்பாள். அபர் ணிக்கா நாய்க்குட்டிகளுக்கு ஒருபோதும் அடிக்கமாட்டாள். அவற்றைத் துன்புறுத்த வும்மாட்டாள்.

ஒருநாள் அபர்ணிக்காவின் நாய்க்குட்டிகளில் ஒன்றைக் காணவில்லை.! அதன் பெயர் ஜீவன். அபர்ணிக்கா கவலை யுடன் ஜீவனைத் தேடினாள். ஜீவன் எங்கேயோ சென்று விட்டது. எல்லா நாய்க்குட்டி களுக்கும் கவலையாக இருந் தது. அந்த நாய்க்குட்டிகளும் ஜீவனைத் தேடின. அவை ஜீவனைத் தேடி வெளியே சென்றன.

போகும்போது ஆடு, மாடு முதலிய மிருகங்களைக் கண் டன. அவற்றைக் கண்டதும் நாய்க்குட்டிகள் குரைத்துக் கொண்டு சென்றன.

"ஜீவனை நீங்கள் கண்டீர் களா?" என அவற்றிடம் கேட் டன.
"நாங்கள் காணவில்லை!" என்று அவை பதில் கூறின.

காகம், புறா, மைனா போன்ற பறவைகளும் மரக் கிளைக ளில் அமர்ந்திருந்தன. நாய்க் குட்டிகள் அவற்றுக்கு அண் மையாகச் சென்றன.

"நீங்கள் ஜீவனைக் கண்டீர்களா?" என்று அவற்றிடம் கேட்டன.
"அந்தக் காட்டுப் பக்கம் போய்ப் பாருங்கள். அங்கே ஒரு குட்டி அழுகின்ற சத்தம் கேட்கிறது" என்று காகம் கூறியது.

நாய்க்குட்டிகள் எல்லாம் காட்டுப் பக்கம் ஓடிச் சென்றன. காட்டுக்குள்ளே ஜீவனைத் தேடிப் பார்த்தன. அப்போது ஜீவனின் அழுகைச் சத்தம் கேட்டது. அது ஒரு பற்றை மறைவில் இருந்தது. நாய்க் குட்டிகள் அதற்கு அண்மையாக ஓடிச் சென்றன.

அங்கே ஒரு புதரில் ஜீவன் கிடந்தது. நாய்க் குட்டிகள் எல்லாமாகச் சேர்ந்து, ஜீவனை வெளியே கொண்டு வந்தன. அதை வீட்டுக்குக் கூட்டிச் சென்றன. அவற்றைக் கண்டதும் அபர்ணிக்கா சந்தோஷம் அடைந்தாள். மகிழ்ச்சியுடன் ஆடிப் பாடி




னாள். அவற்றுடன் சேர்ந்து விளையாடினாள்.

"குட்டிப்பயலே, நீ எங்கே போனாய்?" என்று ஜீவனிடம் அபர்ணிக்கா கேட்டாள்.
"நான் வீட்டுக்கு வெளியே நின்றேன். அப்போது ஒரு மனிதன் வந்தான். என்னைத் தன்னோடு வரும்படி கேட்டான். நான் போக மறுத்தேன். எனக்கு நிறைய விளையாட்டுப் பொருட்கள் தருவதாகச் சொன்னான். அதனால் அவனுடன் போனேன்."

"ஐயையோ...! பின்னர் என்ன நடந்தது?" அபர்ணிக்கா பதற்றம் அடைந்தாள்.

"அங்கு போன பின்னர் தான் தெரிந்தது. அங்கே விளையாட்டுப் பொருட்கள் இல்லை. என்னைத் தங்கள் வீட்டுக் காவல் வேலையை செய்யச் சொன்னார்கள்."
"நீ என்ன செய்தாய்?" என்று அபர்ணிக்கா ஜீவனிடம் கேட்டாள்.

"நான் வேலை செய்யவில்லை. எனக்கு உங்கள் எல்லோரையும் நினைத்துக் கவலை வந்தது. அழுது குளறிக் கொண்டிருந்தேன். அவர்களுக்குப் பிடிக்கவில்லை. கோபப்பட் டார்கள். எனக்குக் கடுமையாக அடித்தார்கள். பின்னர் கொண்டு வந்து புதருக்குள் போட்டு விட்டுப் போய்விட்டார்கள்."

அபர்ணிக்கா கவலை அடைந்தாள். ஜீவனை ஆதரவுடன் அணைத்தவாறு கூறினாள்:
"பார்த்தாயா... இது உனக்கு நல்ல பாடம்! உனக்குத் தெரியாதவர்களின் ஆசை வார்த்தை களை நம்பி ஏமாறக் கூடாது. ஒருபோதும் உனது சகோதரர்களை விட்டுப் பிரியவேண்டாம். எல்லோரும் ஒன்றாக இருந்தால் பாதுகாப்பாக இருக்கலாம்."

நாய்க் குட்டிகள் ஜீவனின் வயிற்றுப் பாகத்தை நாக்கினால் நக்கின. அவை மெல்ல முனகி அழுவதுபோல அபர்ணிக்காவுக்கு ஏதோ சொல் லின. ஜீவனின் வயிற்றில் ஒரு காயம் ஏற்பட்டி ருந்தது. அபர்ணிக்கா பதறிப் போனாள். உடனே அப்பாவை அழைத்து வந்து காட்டினாள்.

அப்பா ஜீவனை மிருக வைத்தியரிடம் கொண்டு சென்றார். அங்கு அதன் காயத்துக்கு மருந்து கொடுத்தார்கள். சில நாட்களில் ஜீவனின் காயம் ஆறியது. எல்லோரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாது சந்தோஷமாக இருந்தார்கள்.

**அனந்தன் இராஜசிங்கம்**
**புத்தளம் இந்து தமிழ் மகா வித்தியாலயம்**
**புத்தளம்**

# பெருவிரலடையாளம்

ஆங்கில மூலம் : ஈவா மீரியம்
தமிழில் இரா. சடகோபன்

என் பெருவிரலடியில் பார்த்தேன்
சிக்கலான கோடுகள், வளைவுகள்,
வட்டங்கள்
இவை யார் வரைந்த ஓவியம்
இவை எனக்கு மட்டுமே சொந்தம் - ஒரு
புதையலின் உரிமைக்காரி நான்.

என் சதையும், உணர்வுகளும்
அவை பெரிதோ சிறியதோ
வேறு யாருக்கு வரும்? - வந்தால்
அவை வேறு இவை வேறன்றோ?

என் பெருவிரலடையாளம்
என்கையொப்பம்
என் வரலாற்றுப் பக்கங்களைப்
புரட்டுவதும்
என் பெருவிரல் தான் - அவை
பேரண்டக் கதவுக்குத் திறவுகோல்

என் தனித்துவம், என் மனப்பதிவுகள் -
எனக்கு
உள்ளே கால்பதிக்கும் ஊன்றுகோல்

நான், நான் தான்
எல்லா அணுக்களும் இணைந்த ஒரு
பெருங்கணிதம்
நான் என் இரத்தத்தாலும், மூளையாலும்
எனக்குள் ஒரு வானிலையை வைத்தேன்
சந்திரனும் சூரியனும் மழையும் கூட
வைத்தேன்
நான் யாராக இருந்தாலும் - இவ்வுலகில்
நான் செல்லும் இடமெல்லாம்
என் பெருவிரல் அடையாளத்தை
வைப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்க ஊர் ஆலமரம்



ஆயிரம் மரங்கள் உண்டு
ஆகாயம் முட்டும் வரை
அவையும் வளர்வதுண்டு – ஆனாலும்
ஆலமரமென்றால் அண்ணாந்து பார்க்காதோர்
அவனியிலே எத்தனை பேர்?

ஊரென்றால் ஆங்கோர் ஆலமரமிருக்கும்
உணர்வுகளைக் கிள்ளுகின்ற கதை பலவும் அதற்கிருக்கும்
பேர் பெற்ற பரம்பரைகள் பலதைப் பார்த்திருக்கும்
பெருங்காற்று அடித்தாலும் பெயர் சொல்லி நிமிர்ந்திருக்கும்
'ஆல்' என்று அதன் பெயரை அருமையாய் வைத்தவர்கள்.
தேரொன்றை இழுத்து வந்து தெருவோரம் வைத்தது போல்
ஆலமரமங்கு அமைதியாய் வீற்றிருக்கும்.

காலை மலர்ந்தவுடன் காலைக்கடன் முடிக்க
களனிக்கரை நோக்கி கைவீசிப் பலர்வருவர்
ஊத்தை பல்வரிசைகளில் ஊன்றிப் படிந்திருக்கும்
வெற்றிலைக் காவிதனை உரைத்துத் துடைத்தெறிய
உரிய விழுதொன்றை உரித்துப் பறித்தெடுப்பர்
ஆலம் விழுதென்றால் அதிலும் ஒரு சுவை இருக்கும்
கயரும் பாற்சுவை தான் கடிதில் கறை போக்கும்.

உச்சிப் பகல் வேளையிலே வெய்யில் சுட்டெரிக்க
உதயத்துப் பகலவனும் உயரே வந்திருப்பான்
பகல் முழுக்கப் பாடுபட்டுப் பஞ்சம் பிழைத்திருப்போர்
பசியாறி ஆலமர நிழலில் அசந்தே படுத்திருப்பர்
அடுத்த வேளைக்கு அவர் உழைக்கப் போகவேணும்
அசந்தே படுத்திருந்தால் ஆர் கொடுப்பார் ஆதாயம்.

அந்திப் பொழுதானால் அண்டை அயலவர்கள்
அன்றைய செய்திகளை அசைபோட வந்திடுவர்.
முன்வீட்டு 'வம்புகளும்' எதிர் வீட்டுத் 'தும்புகளும்'
பக்கத்து வீட்டு படலைக்குள் நிகழ்ந்தவையும்
பாராயணம் செய்வது போல் பலரும் நகைத்திருப்பர்
அத்தகு போதுகளில், ஆலமரம் மட்டும் அமைதியாய்க் கேட்டிருக்கும்.

ஞாயிறு நாளென்றால் கலகலக்கும் ஆலமரம்
அவ்வூர் மட்டுமல்ல அயலூரும் வந்து விடும்
ஆல மர நிழலில் ஆயிரம் பேர் கூடிடுவர்.
சந்தைக் கடைகளிலே சரக்குகள் மலிந்திருக்கும்
அங்காடிக் கடைகளிலே அணி அணியாய்த் துணிமணிகள்
ஆங்கோர் பக்கத்திலே அமைந்திருக்கும் மீன்கடைகள்
கெண்டை, கெழுத்தியென, பாரைசூரையென
மீன்கள் குவிந்திருக்கும்.

பழக்கடைகள் பார்ப்பதற்கு வாயூறச் செய்துவிடும்
வாழை, பாலை, மா, பலா, மாதுளை, நாவற் பழமெங்கும்
நறுமணந்தான் கமழ்ந்து நாசி துளைத்துவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லரிசி, நாட்டுச்சம்பா, குத்தரிசி, கோது உடைத்து வைத்த
எள்ளு, கொள்ளு, கம்பும், களி மாவும்
காணக் கண்கொள்ளாது மொட்டைத்தலை யதுவில்
நாலுமயிர் நீட்டியிருந்தாலும்
தட்டைதடவிச் சீப்பால் வாரிவிட்டு
நாவிதன் வரும்வரைக்கும் திட்டை மேல் வரிசையாக
நாற்பது பேர் காத்திருப்பர்
மொட்டை மழித்து முகச்சவரம் செய்து கொண்டால்
பட்டை விபூதிக்குப் பளபளக்கும் சந்தனமும் நெற்றி துலங்கிவிடும்.
ஆலமரத்தடியில் ஆண்டாண்டாய் நடந்து வரும்
அங்காடிச் சந்தை தனை
ஆலமரம் பார்த்து அதிசயித்து வியந்திருக்கும்.

இருட்டி விட்டால் ஆலமரத்தடிக்கு
ஈ, காக்கா, குஞ்சொன்றும் எட்டியும் பார்ப்பதில்லை
ஆலமரப் பொந்தில் பாம்புகள் படுத்திருக்கும்
ஆந்தையார் கூட அங்கு ஆர அமர்ந்திருப்பார்.
நள்ளிரவு ஆனபின்னர் பேய் பிசாசு வந்திருந்து
கூடிக் கூத்தாடி குதூகலித்துக் கும்மாளம் கேட்டிருக்கும்
என்ற கதையெல்லாம் ஊருக்குள் உலாவுவதால்
ஊருக்குக் கிழக்கே உள்ள தோப்பருகில்
இராவெல்லாம் நடு நடுங்கித்
தனித்திருக்கும் ஆலமரம்.

ஆயிரம் காரியங்கள் ஆலமரத்தடியில் அன்றாடம் நடந்தாலும்
ஆலமரத்துக் கென்றால் அவை ஒன்றும் பொருட்டல்ல
தேனீக்கள் பலவந்து தேன் கூடுகட்டி
இலைகள் கிளைகள் எல்லாம் தேனொழுகிச் சென்றாலும்
ஆடி மாதத்து அமாவாசை நள்ளிரவில்
முனியாண்டிச் சாமிக்கு முதற்பூசை செய்தாலும்
சித்திரை வசந்தத்தில் சில்வண்டு சிந்துபாட
சின்னஞ்சிறுசு, சிறுவயது விடலைக் கூட்டங்கள்
கன்னக் கதுப்பு பொக்குளிச்சிக் கெக்களித்து
கண்ணா மூச்சி களியாட்டம் போட்டாலும்
சின்னமணிப் பொன்னும் சிங்கார சிலம்பரசும்
சித்திரங்கள் போலமர்ந்து சில்மிசங்கள் செய்தாலும்
ஆல மரத்துக் கென்றால் அவை ஒன்றும் பொருட்டல்ல.

ஆலமரத்தின் உச்சாணிக் கொம்பினிலே
ராஜாளிக் கழுகுவந்து கூசாமல் கூடுகட்டும்
அதற்குப் பக்கத்தில் அஞ்சாமல் கிளிவந்து
ஆலம் பழந்தன்னை ஆசையாய் சுவைத்திருக்கும்
காக்கா குயில் கூடக் கத்தாமல் அமர்ந்திருக்கும்
கரிச்சான் குருவிமட்டும் கடுமையாய்ச் சண்டையிடும்
சிவந்த கண் கொண்ட செம்பகப் பறவைகூடச்
செம்பட்டைச் செட்டைகளைப் பரத்திக் கோதிவிடும்
இத்தனை காரியங்கள் அங்கே நடந்தாலும்
ஆலமரம் மட்டும் அதைப்பார்த்து ரசித்திருக்கும்.

'கோபன்'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் தொழில்

தாய் தந்தையருக்கு அடுத்ததாக உலகில் போற்றப்படுபவர் ஆசிரியராவார். இதனையே "அன்னை, தந்தை, ஆசான், தெய்வம் " என்னும் நான்கும்,முதலாகும் என்கின்றனர். அன்னையும் தந்தையும் எம்மை இவ்வுலகில் வாழ வழி செய்தனர் என்றால் அது மிகையாகாது. எம் வாழ்வை வளமாகவும்,செழிப்பாகவும், மற்றோர் மதிக்கவும் வழி செய்பவர்கள் ஆசிரியர்களேயாவர்.

நமது அறிவுக் கண்ணைத் திறந்து வழிகாட்டி எமது வாழ்வில் ஒளியூட்டுபவர் ஆசிரியரே. காலத்தாலும்,காற்று,தீ,மழை,வெள்ளம்,புயல் என்பவற்றாலும் அழிக்க முடியாத செல்வம் கல்வியாகும். "கல்வியே கருந்தனம்" ஆகும். இக்கல்வியை வழங்குபவர், கண்போல் போற்றப்பட வேண்டியவராவார். கல்வி கற்பிக்கும் ஆசிரியர் எம் வாழ்வின் உயர்விற்கு வழிகாட்டுபவர் என்பதாலேயே, ஆசிரியர்கள் ஏணி போன்றவர் எனப்போற்றப்படுகின்றனர். இவ்வாறான ஆசிரியத் தொழில் செய்வோரை யாவரும் மதிப்பர். எங்கு சென்றாலும் என்றும் புகழும்,மதிப்பும் கிட்டும்.

இத்தகைய புனிதமான தொழிலைச் செய்வதனையே நானும் விரும்புகிறேன். ஒரு தனிப்பட்டவரை,குடும்பத்தினரை, ஒரு சமூகத்தை,ஒரு நாட்டை, ஏன் இந்த உலகையே கட்டியெழுப்பி ஒளியெழுப்பி வழிகாட்டக்கூடிய வல்லமையுடைய தொழில் ஒன்று உலகில் உள்ளதெனின் நிச்சயமாக அது ஆசிரியத் தொழிலேயாகும். எனவேதான் இத்தொழிலை நான் விரும்புகிறேன்.

**வஸீமா ருஷ்தி, தரம் 7**
களு/களுத்துறை முஸ்லிம்
மகளிர் மகா வித்தியாலயம், களுத்துறை.

# எனது செல்லப்பிராணி

எனது செல்லப்பிராணி ஒரு நாய் ஆகும்.
அதன் பெயர் ரிங்கோ
ரிங்கோவின் வயது நான்கு..
ரிங்கோ மாமிச உணவை விரும்பி உண்ணும்.
அது என்னைக் கண்டால் வாலை ஆட்டும்.
ரிங்கோ வேகமாக ஓடும்.
அது நன்றி உள்ள மிருகம்.
ரிங்கோ என்னுடன் விளையாடும்.
ரிங்கோ கள்வனைப் பிடிக்கும்.
நான் எனது செல்லப்பிராணி ரிங்கோவை நேசிக்கின்றேன்.



**ஆஞ்சனன் சுப்பிரமணியம்**
**தரம் 3**
**பரி.தோமா கனிஷ்ட பாடசாலை**
**கொள்ளுப்பிட்டி.**




# கண் சிமிட்டும் தாரகைகள்

வானமெனும் பந்தலிலே பூத்திருக்கும்
மலர்களே
அழகிய கண்சிமிட்டும் தாரகைகளே!
வாசமில்லா மலர்களே அழகிய
கண் சிமிட்டும் தாரகைகளே!

நிலவிற்குத் தோழியராக வந்தவர்களே
இரவிற்குப் பொன்னொளி கொடுக்கும்
தீபங்களே
அழகிய கண்சிமிட்டும் தாரகைகளே!



வானத்தில் சிந்தியிருக்கும் முத்துக்களே
வானத்தின் நவரச நாயகிகளே
அழகிய கண்சிமிட்டும் தாரகைகளே!


கண்ணைக் கவரும் வைரங்களே
பார்ப்பவர் கண்ணைக் கவர்பவர்களே
அழகிய கண்சிமிட்டும் தாரகைகளே!

**செ.சரண்யா**
தரம் - 10A
யா/ஸ்ரான்லி கல்லூரி
யாழ்ப்பாணம்

# விஞ்ஞானிகளும் அவர்களின் கண்டுபிடிப்புக்களும்

| | | |
|---|---|---|
| டார்ட் சகோதரர்கள் | : | மின்சாரம் |
| வாட்டர் மென் | : | பேனை |
| ஸ்டீவன்சன் | : | புகைவண்டி |
| தின்மானியர் | : | தையல் மெஷின் |
| கோல்ட் | : | துப்பாக்கி |
| கனோரிங் | : | பரசூட் |
| லூயி பாஸ்ரர் | : | விசர் நாய்க்கடி தடுப்பு மருந்து |
| அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் | : | தொலைபேசி |
| கிராண்ட் பன்ரிங் | : | இன்சுலின் |
| கிரிஸ்டியன் பெர்னாட் | : | இதயமாற்றுச் சிகிச்சை |

தொகுப்பு
மொஹமட் ஃபாஹிர்
தரம் - 10
அஸ்-ஸிராஜ் ஆண்கள் பாடசாலை
கெலிஓய



# உயிரான அம்மா



**எம்.ஃபாஸில், ஆண்டு 11A**
**அல், ஹம்றா மகா வித்தியாலயம் தர்காநகர்**

அன்பெனும் ஆழ்கடலை -
உன்னில் கண்டேனம்மா,
உன் புன்னகையில் -
மனமுவந்து போனேனம்மா,
என் துயிலில் உன் துயிலை -
இழந்தாயம்மா,
என் விழியில் முத்தெனும் -
முத்தங்கள் தந்தாயம்மா,
எனக்காகப் பல இடரைப் -
பொறுத்தாயம்மா,
என் வாழ்வில் நேர்வழியை -
காட்டித் தந்தாயம்மா,
உனக்காக நான் செய்யும் -
தவம் ஏதம்மா,
தினந்தோறும் இருப்பேன் -
உன்னுயிரில் நானம்மா.

## நீங்களும் எழுதலாம்

**'விஜய்'யின் மாணவர் ஆக்கப்பகுதிக்கு நீங்கள் உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம். கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் அறிவு சார்ந்த விடயங்களை எழுதி அனுப்புபவர்கள், உங்கள் ஆக்கங்களை நேர்த்தியாகவும், அழகாகவும், ஒழுங்காகவும் எழுதி அவற்றைப் பாடசாலை அதிபரிடமோ அல்லது வகுப்பாசிரியரிடமோ கொடுத்து உறுதிப்படுத்தி எமக்கு அனுப்பி வையுங்கள். தரமான ஆக்கங்களுக்கு "விஜய்"யில் என்றும் களம் உண்டு. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :**

மாணவர் ஆக்கங்கள்
'விஜய்' த.பெ.எண். 2037
கொழும்பு

# சமாதானம்

இரவு காத்திருப்பது பகலுக்காக
பகல் காத்திருப்பது இரவுக்காக
மக்கள் காத்திருப்பதோ
சமாதானத்திற்காக
ஏனெனில் எங்கள் வாழ்வின் இருளும்
ஒளியும் சமாதானமே!

**என். ஹரிஸ்காந்த்**
**தரம் 8**
**ஸ்ரீ ராமகிருஷ்ணா**
**மத்திய கல்லூரி, கலஹா.**



## ஒற்றுமையை உணர்த்தும் சிவனொளிபாதமலை

எமது இலங்கை நாட்டின் தென் மத்திய பாகம் மலைவளம் கொண்டதாகும். அங்கு மிக உயர்ந்து காணப்படும் மலைகளில் சிவனொளிபாதமலை ஒரு தனிச்சிறப்புடையதாகும். இம்மலை பண்டைய காலந்தொட்டுத் தெய்வத்தன்மை பொருந்தியது எனப் பல மதத்தவர்களாலும் போற்றப்பட்டு வருகின்றது.

சிவனொளிபாத மலையின் அடிவாரத்தில் இருந்து களனி கங்கை, களு கங்கை, வளவை கங்கை எனும் நதிகள் ஊற்றெடுத்துப் பாய்கின்றன. இம்மலையைச் சென்றடைய இரண்டு வழிகள் உள்ளன. ஹற்றன், மஸ்கெலியா ஊடாக அல்லது இரத்தினபுரி வழியாக செல்வதே அவ்வழிகளாகும்.

இந்த மலை உச்சியிலிருந்து சூரிய உதயத்தைக் காண்பதென்பது கண்கொள்ளாக் காட்சியாகவே இருக்கும்.

இம்மலையின் மீது மிகவும் சிரமப்பட்டே ஏறி, இறங்க வேண்டும். சிவனொளிபாத மலைக்குச் செல்வதற்குப் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களே சிறந்தன.

**தே.மனோ பிரகாஷ், ஆண்டு 10F, திரித்துவக் கல்லூரி, கண்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் கிரஹாம்பெல் அல்லவாம்!




அலெக்சாண்டர் கிரஹாம்பெல் என்பவரே தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் என்பது எமது நம்பிக்கை. சரித்திரத்திலும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானியொருவரே தொலைபேசியை முதன்முதலில் கண்டுபிடித்தார் என்று தெரியவந்துள்ளது.

**அலெக்சாண்டர் கிரஹாம்பெல் என்பவரே 1876ஆம் ஆண்டில் தொலைபேசியைக் கண்டுபிடித்தார் என்பது எம் அனைவரினதும் நம்பிக்கை. வரலாறும் இவ்வாறே கூறுகின்றது. ஆயினும் இதற்கு முன்னதாக 1893ஆம் ஆண்டில் ஜேர்மன் நாட்டவரான பிலிப் ரெயிஸ் என்பவரினால் ஒலி (ஓசை)யைக் கேட்பதற்கும், அதனை வேறு இடத்திற்குக் கடத்துவதற்குமான கருவியொன்று தயாரிக்கப்பட்டிருந்ததாகத் தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் தொலைபேசியைக் கண்டுபிடித்த பெருமை பிலிப்ரெயிஸ் என்பவருக்கே சேரவேண்டும் என்று அவர் சார்பில் வாதிடுவோர் கூறுகின்றனர்.**

ஜேர்மன் நாட்டவரான பிலிப் ரெயிஸ் என்பவரினால் 1863ஆம் ஆண்டில் ஒலியைக் (ஓசை) கேட்கக் கூடியதும், ஒலி (ஓசை)யைக் கடத்தக் கூடியதுமான கருவி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆவணங்கள் லண்டனிலுள்ள விஞ்ஞானத் தொல்பொருள் ஆய்வுக் கூடத்தில் வைக்கப்பட்டிருந்தமை கடந்த அக்டோபர் மாதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் தொலைபேசி, பிலிப் ரெயிஸினாலேயே கண்டுபிடிக்கப்பட்டது எனக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதும் இதுதொடர்பான அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் தொலைபேசியைக் கண்டுபிடித்த பெருமை அலெக்சாண்டர் கிரஹாம்பெல்லுக்கு உரித்தானது.

முதலில் பெல் கண்டுபிடித்த தொலைபேசி மூலம் குறுகிய தூரத்திற்கே தொடர்பு கொள்ளக்கூடியதாக இருந்தது. அத்தோடு, பிலிப் ரெயிஸ் தயாரித்த கருவியிலிருந்தும் குறிப்பிட்ட தூரத்திற்குத்தான் தொடர்புகள் கிடைத்தன. இதனால் பிலிப்ரெயிஸுக்கே தொலைபேசியைக் கண்டுபிடித்த பெருமை சேரவேண்டும் என்று அவர் சார்பில் வாதிடுவோர் கூறுகின்றனர். 1876ஆம் ஆண்டிலேயே கிரஹம்பெல் முதல் முறையாகத் தொலைபேசியைக் கண்டுபிடித்தார் என்று கருதப்பட்டபோதும் பிலிப்ரெயிஸ் தனது கண்டுபிடிப்பை அதற்கு முன்னதாக அதாவது 13 வருடங்களுக்கு முன்னதாக அறிமுகம் செய்திருந்தார் என்று இப்போது தெரியவந்துள்ளது.


# நாய்க்கு நன்றி கூறு....!

மனிதனுக்கு உலகத்தில் நாயை விட நல்ல நண்பன் இருக்க முடியாது? அதற்குப் பின்வரும் உரை நல்ல சான்று:

கனவான்களே!

நீங்கள் உலகிலேயே மிக உத்தமனாகக் கருதும் உங்கள் நண்பன், விரைவிலேயே உங்களுக்கு எதிராகத் திரும்பி மிக மோசமான எதிரியாகிவிடுதல் கூடும். நீங்கள் மிகப் பாசத்துடனும், பரிவுடனும் அன்பு செலுத்தி வளர்த்த உங்களின் புத்திரனோ, புத்திரியோ வளர்ந்ததும் நன்றி கெட்டவர்களாக மாறிவிடுதல் கூடும். எமக்கு மிக நெருங்கியவர்களாகவும், மனதுக்குப் பிடித்தவர்களாகவும் இருப்பவர்களும், நம்பிக்கைக்கும் நற்பெயருக்கும் காரணமாக இருப்பவர்களும் கூட விரைவிலேயே துரோகிகளாக மாறி நம்மைக் காட்டிக் கொடுத்துவிடவும் கூடும்.

நாம் சேர்த்து வைத்த பணமெல்லாம் ஒருநாள் கரைந்து போதல் கூடும். பணம் இருந்தாலும் அது எப்போது அவனுக்கு மிக அவசரமாகத் தேவைப்படுகிறதோ அப்போது அவனுக்குக் கிடைக்காமல் போய்விடுதல் கூடும். ஒரு தீய நடத்தைக்காக அவன் சேர்த்து வைத்த எல்லாப் புகழும் மறைந்து போதல் கூடும். நமக்கு வெற்றிமேல் வெற்றிவந்து குவியும்போது நம் முன்னால் மண்டியிட்டு நம்மைத் தலைமீது சூடிப் போற்றித் திரிந்தவர்கள் முதல் தோல்வியை



நாம் சந்தித்த மாத்திரத்திலேயே முதல் ஆளாக நம்மீது - கல் கொண்டு வீசும் வஞ்சர்களாக மாறிவிடுதல் கூடும். ஆனால், துரோகங்கள் மலிந்து போய்விட்ட இந்த உலகில், சுய நலமே கோலோச்சும் இப்பூமியில், மனிதனது வாழ்விலும் தாழ்விலும் அவனுக்கு நண்பனாக இருந்து எப்போதுமே தன்நன்றி விசுவாசத்தில் மாறாத ஒரு பிராணி அவனது நாய் மட்டும் தான்! அவனது சுபீட்சத்திலும், அவனது ஏழ்மையிலும், அவனது சுகத்திலும், சுகவீனத்தின் போதும் அது ஒரே மாதிரியே அவனுடன் இருக்கும்.

மனிதனுக்குத் துயர்வந்துற்று, துன்பத்தில் உழன்று, வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, பனியில் நடுங்கி, வெறுந்தரையில் படுக்க நேரிட்டால் கூட சோர்ந்து போகாது. எல்லாத் துன்பத்திலும் அவனுடன் இருந்து தானும் நன்றியுடன் வெறுந்தரையில் படுத்திருக்கும் அந்த நாய். அவனிடம் அந்த நாய்க்குக் கொடுப்பதற்கு உணவு இல்லாவிட்டாலும் அவன் கையை முத்தமிட்டு வாலைக் குழைத்திருக்கும். அவன் துன்பத்தின்போது பெற்ற புண்களையும், காயத்தையும் அந்த நாய் நக்கி அவனுக்கு இதமளிக்கும். அவன் எல்லாவற்றையும் இழந்து பிச்சைக்காரனாகப் போயிருந்தாலும் அவனை ஓர் இளவரசனாகக் கருதி அவன் உறங்கியிருக்கும்போது கவனமுடன் காத்துப் பார்த்திருக்கும். அவனுக்கிருக்கும் எல்லா நண்பர்களும் அவனைத் தனிக்கவிட்டு விட்டுப் போன பின்னரும் அந்த நாய் மட்டும் அவனுடன் இருக்கும். பணக்காரன் ஏழையான பின்னரும் அவன் புகழ் சுக்குநூறாய்ச் சிதறிப் போன பின்பும், சூரிய சந்திரர்கள் போல் நாயின் அன்பு மட்டும் என்றும் நிலைத்திருக்கும்.

அவனது நிலை உயர்ந்து அவனுக்குப் பட்டமும் பதவிகளும் கிடைத்தாலும், வீடற்ற, நாடற்ற அந்த நாய் அவனிடம் உயர்ந்த சலுகைகளையோ, வசதிகளையோ எதிர்பார்க்காது. ஆனால் அவனது எதிரிகளுக்கு முன்பாக அவனைக் காக்கவும், ஆபத்தில் உதவவும் அவனுடன் தொடர்ந்து இருப்பதனை மட்டுமே அது வேண்டி நிற்கும்.

இறுதியில் பெருநோய்க்கு இலக்காகி அவன் மாண்டு போய்விட்ட பின்பும், அவனை அவன் உற்றார், உறவினர் மண்ணில் புதைத்து, மேடாக்கி வீடு திரும்பிவிட்ட பின்பும், அந்த நாய் கல்லறைக்கு அருகே காத்திருந்து, காதை உயர்த்திக் கனிவுடன் பார்த்திருக்கும். தன் எஜமானை அவர்கள் புதைத்துவிட்டாலும் அவன் கல்லறையில் இருந்து மீண்டும் வரக்கூடும் என எதிர்பார்த்துச் சாவு தம்மைப் பிரித்துவிட்டது என்று அறியாமல் தன் இரண்டு முன்னங்கால்களிடையே தன் தலையைப் பதித்துச் சோகத்துடன், உண்மையான விசுவாசத்துடன் அது அங்கே காத்திருக்கும்.

- மேலே தரப்பட்ட உரை **ஜோர்ஜ் கிரஹாம் வெஸ்ட்** (1830 - 1904) அவர்களால் நிகழ்த்தப்பட்டது. இவர் 1879 முதல் 1903 வரை ஐக்கிய அமெரிக்காவின் மிசூரி மாநிலத்தின் செனேட்டராக இருந்தார். இக்காலத்தில் இவர் சிறந்த பேச்சாளராகவும், பிரச்சினைகளைச் சிறப்பாக விவாதிப்பவராகவும் இருந்தார். இவர் மிசூரி மாநிலத்தின் சிறு நகர் ஒன்றில் இளஞ்சட்டத்தரணியாக இருந்தபோது இவரது கட்சிக் காரர் ஒருவர், தன் நாயைக் கொலை செய்தவரிடம் இருந்து தனக்கு நட்டஈடு பெற்றுத் தருமாறு வழக்கொன்றை ஒப்படைத்தார். இவ்வழக்கின் போது நீதிமன்றத்தில் ஆற்றப்பட்ட உரையின் ஒருபகுதியே மேற்படி உரை. இவர் இந்த வழக்கில், பின்னர் வெற்றிபெற்றார் என்று சொல்லத் தேவையில்லை.!

- நன்றி! **BASL** ஜேர்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிர்க் கவிதைகள்

- இரா. சடகோபன்-

சிங்கள மூலம்:
திலக்க நவரத்ன

(01) தென்னை நாரால் உருவானாய்
தென்னம் மரங்களைப் பிணைத்திருப்பாய்
தெள்ளிய கள் பெற உதவிடுவாய்
மரத்துக்கு மரம் செல்ல வழிவகுப்பாய்

- யார் நீ ? -

(02) ஓவியர்க்கு உற்ற தோழன்
சிறுவர் கற்கும் கருவியாவான்
சித்திரங்கள் தீட்டும் வீரன்
வயிற்றில் கரியை வைத்திருப்பான்

- அவன் யார்? -

(03) மூக்கின் மேல் அமர்ந்திருப்பான்
இரு கண்ணால் பார்த்திருப்பான்
காதுகளை நசுக்கிடுவான்-
கம்பீரம் தந்திடுவான்

- அவன் யார்? -

(04) சுற்றிச் சுற்றி முழங்குவான்
ஊரைக் கூட்டி விளம்புவான்
சுளகு போன்ற காதுடன்
ஊசி முனையில் உழலுவான்

- அவன் யார்? -

(05) முதுகில் பட்டால் உரியும் தோல்
சுடக்கி நடனம் புரியும் கோள்
குதிரை ஓட சுருளும் வால்
அரசன் கையில் கொட்டும் தேள்

- அது என்ன? -

(06) ஆடல் உண்டு மேடையில்லை
திரையுண்டு துணியில்லை
ஆடுவோர் உண்டு உயிரில்லை
காட்சிகள் உண்டு கனவில்லை

- அது என்ன? -

(07) அறைய அறைய அலறுவான்
தலையில் அடியும் வாங்குவான்
உடலை மரத்தில் செலுத்துவான்
ஊசி முனையால் குத்துவான்

- அவன் யார்? -

(08) நெருப்பில் நுழைந்து நெருடிப் பார்ப்பான்
அடுப்பில் கரியை அள்ளித் தருவான்
அடிக்கும் இரும்பை பிடித்துக் கொள்வான்
கம்பியைக் கூடக் கடித்துத் தின்பான்

- அவன் யார்? -

(09) கூட்டம் கூட்டக் கெட்டிக்காரன்
கூவிக் கூவிக் கும்மாளமிடுவான்
அடித்து அடித்து தாளம் போடுவான்
ஆட ஆட அமர்க்களம் செய்வான்

- அவன் யார்? -

(10) முகத்தால் மலர்ந்து ஒளி தருவான்
இருளில் நண்பன்தான் என்பான்
கீற்றாய் பாய்ந்து வழிவிடுவான்
ஒலிம்பிக் நகரில் தானிருப்பான்

- அவன் யார்? -


(11) முகத்தில் கோலம் போட வல்லவன்
முடியை நீக்கும் நல்ல நாவிதன்
கடித்தால் ரத்தம் மெல்ல பீறிடும்
கவனம் தேவை கடைசி வரைக்கும்

- அது என்ன? -

விடைகள் 08ஆம் பக்கத்தில்

# குரங்காரின் கையில் சவரக்கத்தி

ராமசாமி என்பவர் தலைமயிர் வெட்டுவதைத் தொழிலாகக் கொண்டவர். ஊர் ஊராக நடந்து செல்லும் இவர் "தலைமுடி வெட்டுங்கோ.... தலைமுடி..." எனக் கூவி அழைத்துக் கொண்டே செல்வார். விரும்புவர்கள் அவரிடம் தலைமுடி வெட்டிக் கொள்வார்கள். இன்னும் சிலர் மீசை, தாடியையும் சவரம் செய்துக் கொள்வார்கள்.



ஒரு நாள் இவர் இவ்வாறு ஒரு கிராமத்திற்குத் தலைமயிர் வெட்டச் சென்றிருந்தார். நிறையப் பேர் இவரிடம் அன்று தலைமயிர் வெட்டினர்.

தலைமயிர் வெட்டுவதற்கென முழுச் சனமும் அங்கு கூடிவிட்டது. அங்கு காணப்பட்ட மரமொன்றின் மீது அமர்ந்திருந்த குரங்கொன்று இதனை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

இப்படியே நேரமும் சென்றுவிட்டதால்... பகல் பொழுதும் வந்துவிட்டது. எனவே ராமசாமிக்குப் பகல் உணவை உண்ணத் தமது வீட்டிற்கு வருமாறு கிராமத்திலுள்ள ஒரு வீட்டில் அழைத்திருந்தனர். அவரும் அதனை ஏற்றுக் கொண்டு அந்த வீட்டிற்குச் சென்றார். சென்றவர் தனது கையிலிருந்த பெட்டியை வாசலில் வைத்துச் சென்றார். தலைமயிர் வெட்டுவதற்கு பயன்படுத்தும் கத்திரி, சவரக்கத்தி, முகம்பார்க்கும் கண்ணாடி, சீப்பு ஆகியன அந்தப் பெட்டியில் காணப்பட்டன.

இதனையும் கள்ளமாக அவதானித்துக் கொண்டிருந்த அந்தக் குரங்கு மெதுவாக மரத்திலிருந்து கீழே இறங்கிவந்தது. வந்து அந்த பெட்டியைத் திறந்து பார்த்தது. கையில் அகப்பட்ட ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்த்தது. இப்படி ஒவ்வொன்றாக எடுத்ததில் அதன் கையில் அந்தச் சவரக் கத்தியும் கிடைத்தது. அதனை எடுத்த குரங்கார் அதன் ஆபத்துப் புரியாமல் மேலும் கீழும் என முகம் பூராவும் கீறிக் கொண்டார். இதனால் குரங்கின் முகம் எங்கிலும் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. ஆனாலும் குரங்கிற்கு இதன் ஆபத்துத் தெரியவில்லை. இதனையடுத்து முகம் பார்க்கும் கண்ணாடியை அது கையில் எடுத்தது. எடுத்து, கண்ணாடியைத் தனது முகத்தின் அருகே கொண்டு சென்றது. அப்போது தனது இரத்தம் வழிந்த முகத்தை கண்ணாடியில் பார்க்கும் போது வேறு ஏதோ புதுவகை மிருகமொன்றைக் கண்டுவிட்டதாக மிரண்டுப்போன குரங்கார், தலைதெறிக்க காட்டுப் பக்கம் ஓடிப்போய்விட்டார்.

அதன் பின்னர் அந்தப் பக்கமே அது திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

இந்தக் காட்சியை நேரில் கண்ட கிராம வாசிகள் "குரங்கின் கையில் கண்ணாடி போல்", அல்லது "குரங்கின் கையில் சவரக் கத்திப்போல்" என இச்சம்பவத்தை சிலரது பொருத்தமற்ற நடவடிக்கைகளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக காட்டி பேசத் தொடங்கினர்.

## படிப்பினைக் கதை

ஏதேனும் ஒன்றை உருப்படியாக பயன்படுத்தத் தெரியாதவர்களுக்கும், ஒரு பொருளின் அருமை தெரியாமல் அதனை பயன்படுத்த முயற்சிக்கின்றவர்களுக்கும் இந்தக் குரங்காரின் நடவடிக்கை நல்லதோர் படிப்பினை உதாரணமல்லவா!

படத்தை
இங்கே
ஒட்டவும்



விஜய்

மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர் :...............................................

முகவரி : ...............................................

...............................................

பாடசாலை : ...............................................

வகுப்பு : ...............................................


பாடசாலை அதிபரின் கையொப்பம் : ....................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

International Labour Organization

# சர்வதேசத் தொழிலாளர் அமையம் (ILO)



உலகம் பூராவிலுமுள்ள மனிதர்கள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும், நீதியை நிலைநாட்டவும், செயற்பட்டு வரும் நிறுவனமே சர்வதேசத் தொழிலாளர் அமையமாகும். இந்நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் உப நிறுவனமாகச் செயற்பட்டு வருகின்றது.

## வரலாறு

1919ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட வேர்செல்ஸ் உடன்படிக்கையின்படி சர்வதேச நாடுகளின் சங்கத்தில் இவ்வமைப்புச் சுயாதீன நிறுவனமாகவே இயங்கி வந்தது. 1946ம் ஆண்டின் பின் இது ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைக்கப்பட்ட மிகச் சிறந்த ஸ்தாபனமாக மாற்றமடைந்தது.

## தலைமையகம்

சுவிற்ஸலாந்திலுள்ள ஜெனிவா நகரில் அமைந்துள்ளது.

## அங்கத்துவம்

இதில் 176 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன.

## நோக்கங்கள்

- ✔ மனித உரிமைகளுக்கு மதிப்புக் கொடுத்தல்
- ✔ உலகம் பூராவிலுமுள்ள உழைக்கும் தொழிலாளர்களுக்கு உயர் சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தல்
- ✔ சகலராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வாழ்க்கைத் தரத்தையும், மனிதாபிமான சேவைகள் பலத்தையும் வழங்குதல். தொழில் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டையும் உறுதிப்படுத்தல்
- ✔ வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல்
- ✔ தொழில் செய்யும் போது உரிய சட்டதிட்டங்களை முன்வைத்தலும், மற்றும் தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலும்
- ✔ தொழிலாளரின் தேர்ச்சி மட்டத்தை அதிகரித்தல்



## சர்வதேச தொழிலாளர் அமையத்தின் செயற்திட்டங்கள்

- ✔ அடிப்படை மனித உரிமைகளை உறுதிப்படுத்தல், வேலை செய்வோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், மற்றும் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல் போன்றவைகளுக்காகச் சர்வதேச கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களை ஏற்படுத்தல்.
- ✔ சர்வதேச தொழிலாளர் தரத்தை நிர்ணயித்தலும் மற்றும் அவை செயற்படுத்தல் தொடர்பாகத் தேசிய ரீதியில் வழிக்காட்டிக் கொள்கைகள் அமைத்தலும் மேற்பார்வை செய்தலும்
- ✔ மேற்கூறப்பட்ட கொள்கைகளை வெற்றிகரமாகச் செய்வதற்கு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கௌ்ளல் மற்றும் சர்வதேசத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான செயற்திட்டங்களை ஒழுங்கு செய்தல்
- ✔ இத்தகைய சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகப் பயிற்சி, கல்வியறிவை கொடுத்தல், ஆய்வுகளில் ஈடுபடுதல் மற்றும் நூல்கள், சஞ்சிகைகள் வெளியிடுதல் போன்ற செயற்பாடுகளைச் செய்தல்.

## நிர்வாக முறை

சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் என்ற சபையே சகல நிறைவேற்றுத் தீர்மானங் களையும் எடுக்கும். ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் இச்சபை கூடும். ஒவ்வொரு நாட்டைச் சேர்ந்த அரச தொழிற்சங்க சேவையிலுள்ள அதிகாரிகள், தனியார் தொழிற்சங்கத்தினர் ஆகிய இரு தரப்பினரும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்படும். நான்கு பேர் இதில் பங்குபற்றலாம். இங்கு சர்வதேச தொழிலாளர்களுக்குரிய சகல விடயங்களும் கலந்தாலோசிக்கப்படும்.

## நிர்வாக சபை

இச்சபை 56 அங்கத்தவர்களைக் கொண்டது. நிறைவேற்று அதிகாரம் உடையது. பெரிய பிரித்தானியா உட்பட 10 அரசுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன.

## சர்வதேச தொழிலாளர் செயலகம்

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் செயலகமாக இது செயற்படும்.


## செயற்பாடுகள்

- ✔ தொழிலாளர்களின் சேவை மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக உதவும் சர்வதேச கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கல்
- ✔ அடிப்படை மனித உரிமைகள், ஆகக் குறைந்த சம்பளம், தொழிலாளர் நிர்வாகம், தொழில்நுட்ப தொடர்புகள், வேலை தொடர்பான கொள்கைத் திட்டங்கள், சேவைத் தரம், சமூக பாதுகாப்பு, தொழில் ரீதியான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், பெண்கள், தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றுக்கு நடவடிக்கை எடுத்தல்.

## நோபல் சமாதானப் பரிசு

1969ம் ஆண்டு சமூக நிலையை மேம்படுத்தியதன் மூலம், தொழிலாளரின் நலன்புரி மற்றும் உலக சமாதானம் தொடர்பாகச் செய்த சேவையின் காரணமாக நோபல் சமாதானப் பரிசு இந்த ஸ்தாபனத்திற்குக் கிடைக்கப் பெற்றது.

**ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதத்தில் கூடுகின்ற சர்வதேச சம்மேளனம் சர்வதேச தொழிலாளர் தொடர்பான சகல விடயங்களையும் ஆராயும்**



## சர்வதேச தொழிலாளர் அமையத்தின் வெளியீடுகள்

- ✔ சர்வதேச தொழிலாளர் மீளாய்வு. இது மாதத்திற்கொருமுறை வெளிவருகிறது.
  **International Labour Review**
- ✔ வருடாந்த தொழிலாளர் புள்ளி விபரக் கையேடு
  **The year Book of Labour Statistics**

## நட்சத்திர அறிமுகம்

அன்பு உள்ளங்களே, நீங்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஆடல், சங்கீதம், பாடல், நடனம், ஓவியம், எழுத்து, விளையாட்டு, கண்டுபிடிப்புக்கள், எனப் பலதரப்பட்ட இன்னோரன்ன விடயங்களில் சாதனை படைத்திருப்பீர்கள். உங்களின் மேற்படி சாதனைகளை 'விஜய்'யில் பிரசுரிப்பதற்கு நாம் விருப்பத்துடன் உள்ளோம். எனவே, உங்களது சாதனைகளுக்குச் சான்று பகரும் புகைப்படங்களையும், அவை குறித்த விபரங்களையும் உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் (கட்டாயம்) அனுப்பி வைக்குமாறு கேட்டு கொள்கின்றோம்.

அனுப்பவேண்டிய முகவரி
"நட்சத்திர அறிமுகம்"
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்கதை
இறுதி அத்தியாயம்



# பேய்களுக்கு இசைவிருந்தளித்த பார்வையற்ற இசைஞன்

மிகுந்த பிரயத்தனத்துக்குப் பின்னர், பணியாளர் இருவரும் கல்லறைப் பூமியை அடைந்து, புல்லாங்குழல் இசை வரும் இடத்தை நோக்கித் தம் கைவிளக்குகளை உயர்த்தியவாறு சென்றனர். அங்கே தேவராயன் உருத்திர பூதனின் கல்லறைக்கு முன்னால் மண்டியிட்டு அமர்ந்தவாறு புல்லாங்குழல் இசைத்து "பூதன் காதையை" அபராமாக நடித்துப் பாடிக் கொண்டிருப்பதனைக் கண்டனர். அவன் தன் குரலை உயர்த்தியும் தாழ்த்தியும், புல்லாங்குழலைத் தன் தேவைக்கேற்ப திருப்பியும், ஆட்டியும் வலிப்பு வந்தவன் போல் மிகுந்த ஆயாசத்துடன் இசை மழை பொழிந்து கொண்டிருந்தான். அவனது இசையின் ஏற்ற இறக்கத்துக்கு ஏற்றவாறு சுற்றிவர இருந்த எல்லாக் கல்லறைத் தூபிகளில் இருந்தும் மெழுகுவர்த்தி போல் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த இறந்தவர்களின் ஆவிகளும் நர்த்தினமாடுவது போல் சுடர்கள் அதிகரித்தும் குறைந்தும் ஆடிக் கொண்டிருந்தன. ஓர் உயிருள்ள மனிதனுக்கு முன்னால் இவ்வளவு ஆவிகளும் அடக்க ஒடுக்கமாக, பய, பக்தியுடன் அடங்கி ஒடுங்கி, காணப்பட்டமையை வேறு, எங்கும், யாரும் பார்த்திருக்க முடியாது.

கோயில் பணியாளர்கள் இருவரும் தேவராயன் பெயரை உரத்துக் கூறி அவனை அழைத்தனர். அவன் ஆவிகளின் மாயவலையில் சிக்கி இருக்கிறான். என்றும், உடனடியாக அவ்விடத்தில் இருந்து வந்துவிடும் படியும் கூறினார்.

ஆனால் தேவராயன் காதுகளுக்கு அவை எட்டவில்லை. அவன் முன்னரிலும் பார்க்க உத்வேகத்துடன் குழலிசையை இசைக்க ஆரம்பித்தான். உருத்திரபூதனின் வீரப்போரைப் பாட ஆரம்பித்தான். அவன் எதிரிகள் பலரின் தலைகளை எப்படிக் கொய்தான் என்று கூற ஆரம்பித்தான்.

பணியாளர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர்கள் அவன் காதுகளில் குனிந்து அவனை எழுப்பி உடனே தம்முடன் வந்துவிடுமாறு கூறினர். அவன் அவர்களைப் பார்த்து முறைத்தான்.

"இத்தகைய மேன்மை தங்கிய உயர் அரசசபையில்,அரசருக்கும் மந்திரிபிரதானிகளுக்கும் முன்னிலையில், நான் இசை நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறேன். நீங்கள் வந்து குழப்பம் செய்யப் பார்க்கிறீர்களா? அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாது" தேவராயன் சொன்னான்.

"என்னது! அரச சபையில் அரசருக்கும், மந்திரி, பிரதானிகளுக்கு முன்னிலையில் இசை நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறாயா...! மடையா...! இது சுடுகாடு" என்று கூறிப் பார்த்தனர். அவன் அங்கிருந்து அசைவதாகக் தெரியவில்லை. பின்னர் அவனை அப்படியே குண்டுக்கட்டாகத் தூக்கி மடத்துக்குக் கொண்டு வந்து விட்டனர்.

அங்கே குருக்களின் ஆலோசனைப்படி அவனது நனைந்த ஆடைகள் நீக்கப்பட்டு புத்தாடைகள் அணியப்பட்டது. அவனுக்குச் சூடான ஆகாரமும், நீரும் கொடுத்து, திரு நீறிட்டு, தீர்த்தம் தெளித்து, திருமந்திரம் ஓதி அவனை ஆவிகளின் மாயப் பிடியில் இருந்து விடுவித்தார் குருக்கள். பின் அவனிடம் என்ன நடந்ததென்று? கேட்டார்.

அவன் நீண்டநேரம் ஒன்றும் பேசவில்லை. பின்னர் குருக்கள் கோபமடைந்துள்ளார் என்பதால் முதன் முறையாக அரசனின் மெய்ப்பாதுகாவலர் வந்து தன்னை அழைத்துச் சென்றது முதல் பின்னர் நடந்தது எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் குருக்களிடம் கூறினான்.

குருக்கள் அவனுக்கு ஏற்பட்ட விரும்பத் தகாத விடயங்கள் தொடர்பில் மிகவும் மன வேதனைப்பட்டார். பின்னர் அவர் கூறினார்:

"தேவராயா! நீ இப்போது பெரிய ஆபத்தில் சிக்கியிருக்கிறாய். நீ இவற்றை எனக்கு ஆரம்பத்திலேயே சொல்லாதது, நீ செய்த மாபெரும் தவறு. உனது அற்புதமான புல்லாங்குழலிசையே உனக்கு பெரிய ஆபத்தையும், பிரச்சினையையும் கொண்டு வந்துவிட்டது. நீ கடந்த சில இரவுகள் எந்த அரண்மனைக்கும் போகவில்லை என்பதை மனதில் இருத்திக் கொள். ஆனால் நீ இந்த இரவுகளை மயானத்தில், கல்லறைகளின் மத்தியிலேயே கழித்துள்ளாய் என்பதை மனதிற் கொள். நீ கண்டதும், கேட்டதும், அனுபவித்ததும் எல்லாமே மாயை. பேய்களின் கூத்து. பேய்கள் உன் இசையைக் கேட்டு ரசித்து கூத்தாடியிருக்கின்றன. நீ ஒரு முறை அவற்றின் கட்டுப்பாட்டிலும், மாயப் பிடியிலும் சிக்கிவிட்டால் அதில் இருந்து மீள்வது கடினம். அவை உன்னை பின்னர் நார் நாராக கிழித்துப் போட்டுவிடும். ஆனால் அதற்கு நான் ஒரு வழி பண்ணுகிறேன். நீ நான் சொல்வதை நன்கு கவனித்து எது நடந்தாலும் பயப்படாமல் நான் சொன்னபடி செய்ய வேண்டும்."

அன்று மாலை அந்திக் கருக்கலுக்குச் சற்று முன்னதாகவே குருக்கள் தேவராயனை அழைத்துக் குளித்து முழுகிவிட்டு வரச் சொன்னார். பின் அவனை தன்னெதிரில் சம்மணமிட்டு அமரச் செய்து, துர்க்கா தேவியின் பேரில் கெட்ட ஆவிகளின் பிடிகளில் இருந்து காக்கும்படி கவசங்களையும், கட்டறுக்கும் சூத்திரங்களையும் ஓதினார். பின்னர் தன் உதவியாளர்களின் உதவியுடன் அவனை ஆடைகளை களையச் செய்து அவன் உடம்பெங்கும், மார்பு, முதுகு, தலை, கை, கால், முகம், கழுத்து, பாதங்கள் மற்றும் உடம்பெங்கும் தேடித்தேடித் துர்க்கா தேவிக்கான திருமந்திரங்களையும், காப்புச் சூத்திரங்களையும், கவச வாசகங்களையும் தூரிகை கொண்டு திருநீற்றையும், தீர்த்தத்தையும் குளைத்து எழுதினார்.

பின்னர் குருக்கள் தேவராயனிடம் பின்வருமாறு கூறினார். "இன்று நள்ளிரவானதும் நாங்கள் வெளியேறி விடுவோம். நீ உன் அறைக்கு முன் தாழ்வாரத்தில் நீ வழக்கமாக அமரும் இடத்தில் அமர்ந்திருக்க வேண்டும். வழக்கம் போல நீ பெயர் சொல்லி அழைக்கப்படுவாய். ஆனால் நீ என்ன நடந்தாலும் பதில் பேசக் கூடாது. அசையக் கூடாது மூச்சை அடக்கித் தியான நிலையில் ஆடாமல் அசையாமல் நிலையாக அமர்ந்திருக்க வேண்டும். நீ சற்றே அசைந்தாலும், குரல் கொடுத்தாலும் அவை உன்னை நார் நாராய் பியத்துப்போட்டு விடும். நீ மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எதற்கும் பயப்படாதே உதவிக்கு யாரையும் கூப்பிடாதே. ஏனென்றாலும் வேறு யாராலும் உன்னைக் காப்பாற்ற முடியாது. உன்னை நீ தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நான் சொன்னபடி சரியாகச் செய்தால் ஆபத்து உன்னைவிட்டு நீங்கிவிடும். அதன்பின் நீ எதற்கும் பயப்படத் தேவையில்லை."

நள்ளிரவானதும் குருக்களும், பணியாளர்களும் வெளியேறிவிட்டனர். தனக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம், தேவராயன் தாழ்வாரத்தில் தனியாக அமர்ந்திருந்தான். அவனுக்கருகே அவனது புல்லாங்குழல் வைக்கப்பட்டிருந்தது. அவன் பத்மாசனமிட்டு தியான நிலையில் அமர்ந்திருந்தான். ஆடாமல் அசையாமல், பலமாக மூச்செடுக்காமல், செருமாமல் மிகக் கவனத்துடன் துர்க்கா தேவியின் நாமத்தைப் பாராயணம் செய்து கொண்டிருந்தான்.



ஈழப் பெருஞ்சித்தன்

நேரம் நள்ளிரவைக் கடந்து போயிருந்தது. அப்போது தூரத்தே பிரதான பாதையில் இருந்து நுழை வாயிலைத் திறந்து கொண்டு யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. அச் சத்தம் தோட்டத்தைக் கடந்து, அவன் இருக்கும் விறாந்தையை நோக்கி வந்தது. அவனுக்கெதிரில் வந்ததும் நின்றது.

'தேவராயன்' அவனுக்கு பழக்கப்பட்ட கரகத்த அதே கட்டளையிடும் குரல், அவனை அழைத்தது. ஆனால் தேவராயன் ஆடாமல் அசையாமல் அப்படியே வார்த்து வைத்த சிலை போல் குத்துக் கல்லென அமர்ந்திருந்தான்.

"தேவராயன்" அந்தக் குரல் இரண்டாம் முறையும் அழைத்தது. தேவராயன் அசையவோ, இமைக்கவோ கூட இல்லை.

'தேவராயன்" மூன்றாவது அழைப்பு கடுமையாகவும் கோபத்துடனும் வந்தது. தேவராயன் ஐம்புலனையும் அடக்கிக் கொண்டு சிலையெனச் சமைந்திருந்தான்.

"என்ன பதிலையே காணோம்... பயல் எங்கு இருக்கிறான் என்று பார்ப்போம்" அந்தக் குரல் தனக்குள்ளேயே பேசிக் கொண்டு தாழ்வாரத்தின் படிகளில் ஏறி, மேலே வந்தது. காலடிச் சத்தம் அவன் அருகில் வந்ததும் நின்றது. சில நொடிகள் மௌனமாகக் கடந்தன. அந்தச் சில நொடிகளே, தேவராயன் வாழ்வில் மிக நீண்ட மணித்தியாலங்களாக இருந்தன. அவன் இதயம் படபடத்து, தன்னைக் காட்டிக் கொடுத்து விடுமோ? எனப் பயந்தான். எங்கும் மரண அமைதி நிலவியது.

இறுதியில் அவன் காதருகே அந்தக் குரல் ஒலித்தது." புல்லாங்குழல் மட்டுமே காணப்படுகிறது...அதனை இசைப்பவன் எங்கே?.... ஆஹா....எனக்கு இரண்டு காதுகள் மட்டு[ம்] தெரிகின்றன......ஆ[ம்] ....இப்போது புரிகிறது, ஏன் அவன்பேசவில்ல என்பது....அவனுக்கு பதில் கூற வாய் இல்லை....அவனுக்கு இந்த இரண்டு காதுகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.... இப்போது நான் என்ன செய்வது....அரசருக்கும் மந்திரி பிரதானிகளுக்கும் என்ன பதில் சொல்வது 'அவர்கள் அத்தாணி மண்டபத்தில் கூடியிருப்பார்களே....எதற்கும் இந்த காதுகள் இரண்டையும் எடுத்துச் செல்வோம்..."

அடுத்த நொடியில் தேவராயனின் இரண்டு காதுகளையும் மிகக் கூரான இரும்பாலான இரண்டு கரங்கள் பியத்தெடுத்துக் கொண்டன. அந்த வேதனை அத்தனை பெரிதாக இருந்த போதும் அவனிடம் இருந்து ஒரு சிறு ஒலிதானும் கிளம்பவில்லை.அதனைத் தொடர்ந்து அந்தக் காலடிச் சத்தங்கள் தாழ்வாரத்தில் இருந்து கீழிறங்கிச்

**தொடர்ச்சி 19ஆம் பக்கத்தில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசிச் சோற்றைப் பிரதான உணவாக உண்பதால் பயன் உண்டா?

கடந்த வாரம் நாம் பார்த்த உணவுக் கோபுரத்தின் கடைசித் தட்டிலிருப்பது தானியங்களும் கிழங்குகளுமாகும். இவற்றிலிருந்தே எமக்குத் தேவையான சக்தியும் கார்போஹைறட்ரேட்டும் கிடைக்கின்றன. அரிசி, கோதுமை, குரக்கன், கம்பு, முதலான தானியங்களில் கார்போஹைறட்ரேட் பெருமளவு காணப்படுகின்றது. அரிசி எமது நாட்டிலும் ஆசிய நாடுகளிலும் வாழும் கோடிக்கணக்கான மக்களின் பிரதான உணவாகும்.



அரிசி உலகம் முழுவதும் வெவ்வேறு சுவாத்திய நிலைமைகளின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றது. [illegible]00க்கும் அதிகமான இனங்களைச் சேர்ந்த அரிசி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு விசேட இயல்பு உண்டு. இலங்கையில் நாம் உண்ணும் அரிசி வேக வைத்தால் ஒட்டிப்பிடிக்க மாட்டாது. ஆனால் ஜப்பான் போன்ற நாடுகளில் சாப்பிடப்படும் அரிசி வேக வைத்ததும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்கிறது! எனினும் வெவ்வேறு இன அரிசியிலுமுள்ள ஊட்டச் சத்தின் தன்மையில் அவ்வளவு வித்தியாசமில்லை. அரிசியில் 75% மாப்பொருளும் (கார்போஹைறட்ரேட்), 7-9% புரதமும் ஏறக்குறைய 0.5 - 1% கொழுப்பும் உண்டு.



அரிசியிலுள்ள மாப்பொருள் இலகுவாக சீரணிக்கக் கூடியது. அரிசியிலுள்ள மாப்பொருள் 98 - 100% சீரணிக்கும் தன்மையுடையது. இதனாலேயே அனேகமான குழந்தை உணவுகளில் அரிசி பயன்படுத்தப்படுகின்றது. எமது நாட்டில் அரிசி மாவிலிருந்து தயாரிக்கப்படும் இடியப்பம், அப்பம், பிட்டு, என்பன பிரபல்யமான உணவாகும். காலை உணவு இவற்றுள் ஏதேனும் ஒன்றாக இருக்கும்.

இரவு சாப்பாட்டின் பின்னர் திரும்பவும் அடுத்த நாள் காலை வரை நாம் எதுவும் சாப்பிடுவதில்லை. எனவே அடுத்த நாள் நாம் செய்யவிருக்கும் வேலைகளுக்கும் எமக்குச் சக்தி தேவைப்படுகிறது. இந்தச் சக்தியை நாளின் முதல் உணவாகிய காலை உணவிலிருந்தே நாம் பெறுகின்றோம். படிப்பு, அலுவலக வேலை, வீட்டு வேலை போன்ற காரியங்களைச் செய்வதற்கும் எமது மூளையும், சரீரமும் வேலை செய்யவேண்டும். ஆதலால் காலையில் நாம் அரிசி மாவிலிருந்து தயாரிக்கப்பட்ட சாப்பாட்டைச் சாப்பிடுவதன் மூலம் எமக்குத் தேவையான சக்தி விரைவாகக் கிடைக்கிறது.

நீங்கள் சுகமில்லாமலிருக்கும் போது அரிசிக் கஞ்சியையே அம்மா உங்களுக்குத் தருவாள். ஏனெனில் பலவீன முற்றிருப்பவர்களுக்கு அரிசிக் கஞ்சியிலிருந்து அதிக அளவு போஷாக்குக் கிடைக்கிறது. நோயின் போது வாந்தியெடுப்பதனாலும், வயிற்றோட்டத்தினாலும் எமது உடல் அதன் நீர்மங்களையும் திரவத்தையும் இழக்கின்றது. அப்போது உடம்பு மாப்பொருளிலிருந்து சர்க்கரையை மெல்ல மெல்ல விடுவிக்கின்றது.

மேலும் அரிசியிலுள்ள புரதம் எமது உடம்பைத் தேற்றுவதற்கு அத்தியாவசியமான அமினோ அமிலத்துடன் சம அளவிலான புரதச் சத்தைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அரிசியிலுள்ள விட்டமின்களும் கனிப் பொருட்களும் அரிசித் தானியத்தின் வெளித் தோலிலேயே உண்டு. அரிசியை அரைப்பதன் மூலம் இது அழிந்துபோகக் கூடும். ஆனாலும் அரைக்கப்பட்ட அரிசியில் ஓரளவு விட்டமின்களும், கனிப்பொருட்களும் எஞ்சியுள்ளன. சமைக்கும்போது இச்சத்துக்கள் அழிந்துபோவதைத் தடுப்பதற்கு நீரைப் பொங்கி வழிய விடக் கூடாது. பாரம்பரியச் சமையல் முறையைவிடத் தற்காலத்தில் ரைஸ் குக்கரில் சமைப்பதன் மூலம் ஊட்டச் சத்துக்கள் பாதுகாக்கப்படுகின்றன.

எனவே எமது பிரதான உணவாகிய சோறு, எமக்குச் சக்தியைத் தருகிறது. எமது உடம்மை விருத்தி செய்கிறது. சுகமில்லாதிருக்கும்போது போஷாக்கைத் தருகிறது. அதைவிட நோயுற்றிருக்கும் போது சிறந்த உணவாக அமைவதும் அரிசிக் கஞ்சியே.

## பேய்களுக்கு இசைவிருந்து....

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)


சென்றன. பின்னர் அவை மெதுவாகத் தோட்டத்தைக் கடந்து வெளிவாயிலையும் கடந்து, பாதையை அடைந்து மறைந்து போய்விட்டன. காலடிச் சத்தங்கள் மறைந்த போய்விட்ட பின்னரும் கூட தேவராயன் அசையவில்லை. அவன் இரண்டு காதுகளில் இருந்தும் இரத்தம் பெருக்கெடுத்த போதும் அவன் தொடர்ந்தும் தியான நிலையிலேயே இருந்தான்.

அதிகாலை வைகறைக்கு முன்பே பிரதம குருக்கள் மடத்துக்குத் திரும்பி வந்துவிட்டார். அவர் உடனேயே தாழ்வாரத்துக்கு விரைந்து, தேவராயனுக்கு என்ன நடந்ததென்று பார்க்க விரும்பினார். அவர் தேவராயன் இருந்த இடத்தை அடைந்த போது, ஏதோ வழுவழுப்பான திரவத்தில் கால் வைத்து வழுக்கி விழப் பார்த்தார். பின் சமாளித்துக் கொண்டு தன் கைவிளக்கைக் கொண்டு அது என்னவென்று பார்த்தவர் "ஓ" வென்று பெருங்குரலெடுத்து அலறிவிட்டார்.

அங்கே அவர் பார்த்தது தேவராயன் இரத்தம் பெருகப் பெருக அதற்கு மத்தியில் அமர்ந்திருந்த காட்சியைத் தான். அவன் தொடர்ந்தும் தியான நிலையிலேயே இருந்தான். அவன் காதுகள் இரண்டையும் காணவில்லை. மாறாக இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

"தேவராயா...எழுந்திரு...என்ன நடந்தது....? இது என்ன இரத்தம்....? காயம்...." குருக்கள் அவனை உலுப்பினார்.

தேவராயன் அவரது பழக்கப்பட்ட குரல் கேட்டதும் எழுந்திருந்தான். தான் பாதுகாப்பாக இருக்கிறேன் என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அவனுக்கு பெருந்துக்கமும் அழுகையும் வந்தது. அவன் தேம்பித் தேம்பி நடந்த விடயங்களை குருக்களிடம் கூறினான்.



குருக்கள் அப்போது தான், தான் விட்டதவறை உணர்ந்தார். அவன் உடம்பு முழுவதும் மந்திரங்களையும், சுலோகங்களையும் எழுதிய போது, அவன் காதுகளிலும் எழுதத் தவறியிருந்தர். அந்தப் பொறுப்பை தனது உதவியாளர்களிடம் விட்டிருந்ததால் அவர்கள் அதனை சரியாகச் செய்திருக்கவில்லை. தான் அதனைச் சரியாக மேற்பார்வை செய்யாதது தனது தவறு தான் என்று அவர் தேவராயனிடம் கூறினார்.

எனினும் காதுகள் விடயத்தில் தன்னால் ஒன்றும் செய்ய முடியாதென்றும், காயங்களைக் குணப்படுத்துவது தான் இப்போதைய தேவைப்படாதே தேவராயா.... என்று கூறி மிகப் பெரிய ஆபத்தில் இருந்து தப்பியுள்ளாய் நீ. அதற்காக சந்தோஷப்படு" என்று அவனுக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர் தேவராயனுக்குத் தகுந்த மருத்துவம் செய்து அவன் காதுப்புண்கள் குணப்படுத்தப்பட்டன. அவனது இந்தப் புதுமையான கதை தூரதேசங்களுக்கெல்லாம் பரவி அவன் பெயர் பெற்ற இசைக்கலைஞனாகி விட்டான். தூர இடங்களில் இருந்தெல்லாம் பெரும் தனவந்தர்கள் கூட அவன் இசையைக் கேட்க வந்தனர். அவர்கள் கொடுத்த வெகுமதிகளால் அந்த கண் தெரியாத இசைஞன் தானும் ஒரு தனவந்தனாகிவிட்டான். எனினும் இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் அவனுக்குக் "கண்தெரியாத இசைஞன்" என்ற அடைமொழியை மாற்றி, மக்கள் "காதற்ற இசைஞன்" என்றே அழைத்தனர். **வடஇலங்கையில் பல்லவராயன் கட்டு என்ற இடத்துக்கு வடக்கே, சூத்திர பூதனின் கல்லறைகள் இருந்த பிரதேசத்துக்கு "பேய்முனை" என்ற பெயரும் நிலைத்துவிட்டது. இப்போதும் இலங்கைத் தேசப்படத்தில் பூநகரிக்குக் கீழே பேய்முனை, பல்லவராயன் கட்டு என்ற இடப்பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.**

**(முற்றும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சோதனைகளைக் கடந்த சாதனை வீரன்

சோதனைகள் பலவற்றுக்கு ஆளாக்கப்பட்ட முரளிதரன் சாதனை படைத்து விட்டார்! உலகிலேயே அதிகூடிய டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற ரீதியில் இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் முதலிடத்தை பிடித்துவிட்டார். ஏற்கனவே இச்சாதனைக்கு உரியவராக இருந்தவர் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் கொட்னி வோல்ஷ் ஆவார். அவர் 519 விக்கெட்டுகளைப் பெற்றே இச்சாதனைக்குரியவராய் இருந்தார்.

அவுஸ்திரேலிய அணியின் சுழல் பந்து வீச்சாளர் ஷேன் வோர்னா? அல்லது இலங்கை அணியின் முத்தையா முரளிதரனா? இச்சாதனையை முதலில் முறியடிக்கப்போகின்றவர் என கிரிக்கெட் உலகமே ஆவலுடன் அவதானித்துக் கொண்டிருந்தது.

இலங்கை அணியின் ஸிம்பாப்வே விஜயத்தின் போது முரளிதரனால் இச்சாதனை முறியடிக்கப்படும் என்ற நம்பிக்கை அநேகருக்கு எழுந்தது. ஆம்! அந்த நம்பிக்கையினை ஸிம்பாப்வேயுடனான முதலாவது டெஸ்ட், மூன்றாம் நாள் ஆட்டத்தின்போது ஹராரே விளையாட்டு மைதானத்தில் மெய்ப்பித்துக்காட்டியுள்ளார் முரளிதரன். அன்றைய தினம் அணியினர் இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்து ஆடிய போது கொட்னி வோல்ஷின் சாதனையைச் சமப்படுத்தியிருந்த முரளிதரன் ஸிம்பாப்வேயின் துடுப்பாட்ட வீரர் என்கலாவின் விக்கெட்டைப் பெற்றதன் மூலம் 520 விக்கெட்டுகளைப் பெற்ற சாதனை வீரரானார். இதற்கடுத்த ஓவரிலும் மற்றுமொரு வீரரையும் ஆட்டமிழக்கச் செய்து தனது மொத்த விக்கெட் எண்ணிக்கையை 521 ஆக உயர்த்திக் கொண்டார். எந்தவொரு பந்து வீச்சாளருக்கும் அச்சுறுத்தலாக இருப்பவர்கள் சிறந்த துடுப்பாட்ட வீரர்களே. ஆனால் முரளிதரன் விடயத்தில் அவருக்கு அச்சுறுத்தலாக இருந்தது, அவுஸ்திரேலிய ஊடகங்களும், அவுஸ்திரேலிய அணியின் சில வீரர்களுமே. இவர்களது பலவிதமான குதர்க்கமான விமர்சனங்களை, இடைஞ்சல்களை முறியடித்தே முரளி இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார். அந்த வகையில் முரளிதரன் தனது மனோதிடத்தையும் சமநிலையில் வைத்திருந்ததன் மூலம் இரட்டைச் சாதனையாளன் ஆகிவிட்டார்.

இனி முரளியின் அடுத்த கட்ட நகர்வு எதுவாயிருக்க வேண்டும்? முரளிக்கும் ஷேர்ன் வோர்னுக்கும், அதிக விக்கெட் வித்தியாசம் கிடையாது. எனவே முரளியின் சாதனையை விரைவில் முறியடித்தாக வேண்டும் என்ற வெறியில் ஷேர்ன் வோர்ன் நிச்சயம் இருப்பார். எனவே, ஸிம்பாப்வேயுடன் எஞ்சியுள்ள அடுத்தடுத்த டெஸ்ட் போட்டிகளில் முரளிதரன் இயன்ற வரையில் அதிக விக்கெட்டுகளைப் பெறுவதன் மூலம் தனது மொத்த விக்கெட் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்தவொரு தந்திரோபாயத்திற்கு இலங்கை அணியின் தலைவர் மார்வன் அத்தபத்துவும் முரளிக்கு ஒத்துழைப்புக் கொடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

## சனத் ஜயசூரியவின் அதிகூடிய ஓட்டங்கள்

சிம்பாப்வே அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில், சனத் ஜயசூரிய கூடிய ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் இலங்கை அணியின் சார்பாக ஒருநாள் போட்டிகளில் அதி கூடிய ஓட்டங்களைப் பெற்றவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.



ஏற்கனவே இந்தச் சாதனையை நிகழ்த்தியிருந்தவர் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வாவாகும். இவர் 9284 ஓட்டங்களை ஒருநாள் போட்டிகளில் பெற்று முன்னணியில் இருந்து வந்தார்.

சிம்பாப்வேயுடனான போட்டிகளின் போது சனத் ஜயசூரிய பெற்ற ஓட்டங்களுடன், சனத் ஜயசூரியவின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 9288 ஓட்டங்களாக அதிகரித்தமையின் மூலமாக அரவிந்தவை முந்திக் கொண்டு முதல் நிலைக்கு அவர் வந்துள்ளார்.

316 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றியதன் மூலமே சனத் ஜயசூரிய இந்த மொத்த ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 16 சதங்களும், 55 அரைச் சதங்களும் அடங்குகின்றன.

## சச்சின் அன்பளிப்புச் செய்த சிறுவர் மைதானம்



சிறுவர்கள் விளையாடுவதற்கெனச் "சிறுவர் விளையாட்டு மைதானம்" ஒன்றை இந்தியக் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் அன்பளிப்புச் செய்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 24ம் திகதியன்று சச்சின் தனது 31ஆவது பிறந்த நாளினைக் கொண்டாடினார்.

இதனையொட்டியே அவர் தனது மனைவி அஞ்சலியுடன் டெல்லியில் வைத்து இந்த மைதானத்தைச் சிறுவர்களிடம் கையளித்தார்.

## மஹேலவின் 4000 ஓட்டங்கள்!

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் மஹேல ஜயவர்தன ஒருநாள் போட்டிகளில் 4000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளார். சிம்பாப்வேயுடனான ஒருநாள் போட்டித் தொடரின் 5ஆவது போட்டியிலேயே அவர் 4000 ஓட்டங்களை எட்டினார்.

இதன்படி 157 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டே 4066 ஓட்டங்களை மஹேல ஜயவர்தன பெற்றுள்ளார்.

இதில் 6 சதங்களும், 20 அரைச் சதங்களும் அடங்குகின்றன.

## மீண்டும் அணியில் இடம் பிடிப்பேன்!

**- ஹஷான் திலகரட்ன**

இலங்கை அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன் என்று இலங்கை அணியின் முன்னாள் வீரர் ஹஷான் திலகரட்ன தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியுடனான படுதோல்வியை அடுத்து ஹஷான் திலகரட்ன தலைமைப் பொறுப்பிலிருந்து இராஜினாமாச் செய்திருந்தமை நாம் அறிந்ததே!



ஆனால் அதிகாரிகளின் அழுத்தம் காரணமாகவே, ஹஷான் அவ்வாறு இராஜினாமாச் செய்ததாகத் தற்போது செய்திகள் அடிபடுகின்றன.

83 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருந்த ஹஷான், 10 போட்டிகளுக்கு அணியின் தலைவராக இருந்தார். இதில் ஒரேயொரு போட்டியில் மட்டுமே வெற்றி கிட்டியிருந்தது. 35 வயதை அடைந்துள்ள ஹஷான் இம்முறை சிம்பாப்வே சென்ற அணியிலும் இடம்பெறவில்லை.

ஆயினும், ஏற்கனவே இரண்டரை வருடங்களாக அணியிலிருந்து ஓரங்கட்டப்பட்டிருந்த நிலையிலும், கடும் போராட்டத்தின் பின்னர், மீண்டும் அணியில் இடம்பெற்றுத் தலைமைப் பொறுப்பைப் பிடித்தது போல், இம்முறையும் மீண்டும் நிச்சயம் அணியில் இடம்பிடிப்பேன் என்று ஹஷான் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக்கை அச்சுறுத்தும் குண்டு வெடிப்பு!

இம்முறை சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்க நாட்டின் எதென்ஸ் நகரில் நடைபெறவுள்ளன. ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மேற்படி போட்டிகளுக்கு மூன்று மாதங்களே உள்ளன. இத்தகைய ஒரு நிலையிலேயே கடந்த மே 05ஆம் திகதியன்று மேற்படி போட்டிகள் நடைபெறவுள்ள எதென்ஸ் நகரில் 3 குண்டுகள் வெடித்துள்ளன.

இவ்வாறு குண்டு வெடிப்புக்கள் நடந்தமையானது அந்நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகளை உஷாரடையச் செய்துள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள ஏற்பாட்டுக் குழு அதிகாரிகள் தங்கியிருந்த பகுதி அருகாமையிலேயே மேற்படி குண்டுகள் வெடித்துள்ளமையால் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்த வேண்டிய நிலைக்கு அந்நாட்டு அரசாங்கம் ஆளாகியுள்ளது. இம்முறை ஒலிம்பிக் போட்டிகளுக்கென 50,000 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதோடு, இதற்கென 650 பில்லியன் யூரோவும் செலவிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வயல் வே.குமாரசாமியின்

# பாப்பாப் பாட்டுக்கள்

## வெள்ளிப் பூக்கள்!

தங்கத் தூளை வானத்திலே
தட்டிக் கொட்டிச் சிதறிய தார்
அங்கும் இங்கும் எங்குமாக
அள்ளி எறிந்து விட்டதார்

கூட்டி அள்ளி எடுத்திட
கூட வரப் போவதார்
பாட்டி கூட வாறியா?
பாப்பா நீயும் வாறியா? போவம்!

புள்ளிப் புள்ளி வெள்ளி களாய்
பூப்போல் மின்னி மின்னிகளாய்
துள்ளி ஓடிப் பொறுக் கிட ஆர்
வரப் போறீங்க?

## பூவும் மணமும்

மல்லிகைப் பூ மணக்கிறதே
மணந்து பாருங்கள்
மலரைப் பொறுக்கி ஒவ்வொன்றாய்
நாரில் கோருங்கள்
முல்லைப் பூப் பல்லுத் தெரியு
மெல்லச் சிரியுங்கள்
பூவின் வாசம் சின்னதென்று -
மோந்து
நினைத்துச் சொல்லுங்கள்

## பனித் துளி

முத்து முத்தாய்ப் பனித்துளி
மொட்டு மேலும் பனித்துளி
கொத்துப் பூவில் பனித்துளி
குஞ்சுக் குண்டுப் பனித்துளி

புல்லும் சுமக்கும் பனித்துளி
பூவும் சுமக்கும் பனித்துளி
மெல்ல வெயிலைக் கண்டதும்
மின்னல் போல மறைஞ்சதேன்?

## ஊர்சுற்றி......

ஊர் சுற்றப் போவோம்
எங்கும் உலாவி வருவோம்
நீர் நிற்கும் குளத்தில்
கல் எறிந்து பார்ப்போம்
நீர்க்குமிழி தோன்றும்
நின்றதனை ரசிப்போம்
ஊர்க்குருவி உதிர்த்த
இறக்கைகள் பொறுக்கி
இன்னும், பலதைச் சேர்த்துக்
கொண்டு
வீடுவந்து சேர்வோம்

## தாமரை

ஊருக்கு உள்ளே - வயல்வெளி
வயலுக்கு உள்ளே - ஒரு குளம்
நீருக்குள்ளே - தாமரை
நீரின் மேலே - பார் இலை
இன்னும் மேலே - பார் மலர்
எங்கும் நிறைந்த - பொன்மலர்
என்னைப் பார்த்து - நிற்கிறாய்
இறங்கிப் பிடுங்க - வாறியா?



உங்கள் பாடசாலைகளிலும் பலவிதமான நிகழ்ச்சிகள் போட்டிகள், வைபவங்கள் நடைபெறலாம். அவை தொடர்பான புகைப்படங்களை எமக்கு அனுப்பி வைத்தால் அவற்றை 'விஜய்' யில் பிரசுரிக்கத் தயாராக உள்ளோம். படத்துடன் அவற்றின் விபரங்களையும் எழுத மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி ....

'விழா உலா'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு



கொழும்பு டி.எஸ் சேனநாயக்க கல்லூரியின் வெகுஜன தொடர்பு ஊடக அமைப்பு அண்மையில் www. dssmedia . musicmix. at எனும் பெயரில் இணையத்தளமொன்றை ஆரம்பித்து வைத்தது.

கல்லூரி அதிபர் அசோக சேனானி ஹேவகே தலைமையில் நடைபெற்ற இணையத் தள அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட புரவலர் ஹாசிம் உமர் கணனியில் குத்துவிளக்கேற்றுவதையும், கல்லூரி ஊடக அமைப்பின் நிதியத்துக்காக விற்கப்படும் ஸ்டிக்கர் விற்பனையை ஹாசிம் உமர் அவர்கள் ஆரம்பித்து வைப்பதையும் படத்தில் காணலாம். இவ்வைபவத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம் அமீன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். பாடசாலை மட்டத்தில் இயங்கும் ஊடக அமைப்பொன்று, இணையத் தளமொன்றை ஆரம்பித்துள்ளமை இதுவே முதற் தடவையாகும்.



எஃப். சதீகா, தரம் 8
கு/அல்மினா மு.ம வித்தி.
இப்பாகமுவை



குப்ரா ஜிப்ரி, ஆண்டு - 7T
கண்டி பெண்கள் உ/த
பாடசாலை, கண்டி



எஃப். ஸீனத், ஆண்டு - 6C
சாஹிரா தேசிய பாடசாலை
அம்பாந்தோட்டை



சண்முகப்பிரியன், தரம் - 10B
குயில்வத்தை தமிழ்
ம.வித்தி. றோசல்ல



பிரவீன், ஆண்டு - 4A
புனித அந்தோனியார்
மகா வித்தியாலயம்



எஃப். அப்ரா, தரம் - 3A
அல்ஹிலால் ம.கல்லூரி
நீர்கொழும்பு




பிள்ளைகளே;
நீங்களும் உங்கள் கைவண்ணங்களை எமக்கு அனுப்பிவைக்கலாம்.
உங்கள் சித்திரங்களை A4 தாளில் மாத்திரம் வரைந்து பெயர் விபரங்களைச் சித்திரங்களின் பின்புறமாக எழுத மறவாதீர்கள்
அனுப்பவேண்டிய முகவரி:-

'கைவண்ணங்கள்'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு



தி. வாகீசன், ஆண்டு - 7C
யா/மல்லாகம் ம.வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு படங்களுக்கிடையே ஆகக் குறைந்தது 14 வித்தியாசங்கள் காணப்படுகின்றன. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.






## பின்வரும் சொற்களிலுள்ள பிழைகளை இனம் கண்டு சரியான விடையை எழுதுக.

1. வெந்மை ..............................
2. அய்ரோப்பாக் கண்றம் ..............................
3. மருத நிழம் ..............................
4. மண்டபம் ..............................
5. புரத்தினை ..............................

## இடைவெளியை நிரப்புக

உதாரணம்




## அறிவுக்கு விருந்து

தயாரிப்பு
நுஸ்பா கௌஸ்

## சரி, பிழை கூறுக

1. பூட்டான் நாட்டின் தலைநகரம் டாக்கா ஆகும். ( )
2. வரலாறு என்றால் சிங்களத்தில் "இதிஹாசய" என்று பொருள்படும் ( )
3. இவ்வாண்டின் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இலங்கையின் 13ஆவது பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. ( )
4. நாம் பாதையில் செல்லும்போது எப்போதும் இடதுபுறமாக செல்ல வேண்டும். ( )

## இந்த வண்ணாத்திப் பூச்சிக்கு மலரைச் சென்றடைவதற்கு வழி காட்டுங்கள் பார்க்கலாம்



## பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை தெரிவுசெய்து எழுதுங்கள்

1. Principal ......................................., Principle .......................................
(கொள்கை, அதிபர்)
2. Hole ........................., Hall ........................., Whole.........................
(மண்டபம், முழுவதும், துவாரம்)
3. Compliment ..............................., Complement ...............................
(பூர்த்தி செய்து, வாழ்த்து)
4. See ......................................, Sea ......................................
(பார், கடல்)
5. Price......................................, Prize ......................................
(பரிசு, விலை)

## குறுக்கெழுத்துப் போட்டி, இல. 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | | 3 |
| லா | | 4 | | 5 த | |
| 6 | | ப் | 7 ப | | |
| | | 8 | க் | | 9 |
| | | 10 டை | | | |
| 11 | | | | 12 | தி |

**இடமிருந்து வலம்**

1. இரவும் பகலும் மாறி மாறி வரும். இரவு என்பது
4. 1958ஆம் ஆண்டில் இலங்கையைக் கைப்பற்றிய வெளிநாட்டவர்கள் (குழம்பியுள்ளது)
6. காயவைத்தல் என்ற பொருளைத் தருவது
8. "எனக்கு சைக்கிள் ஓட்டப் பழக்கு" இவ்வசனத்தில் ஏவலாக வந்துள்ள சொல் (குழம்பியுள்ளது)
10. வெயில், மழை இரண்டுக்கும் உதவும் தோழன் (மாறியுள்ளது)
11. இராமாயணத்தில் இராமனின் தோழன்
12. வெண்ணிலா

**மேலிருந்து கீழ்**

1. திருகோணமலையில் காணப்படும் மிகவும் பிரசித்தி பெற்ற கடற்கரை
2. இந்தியாவிலுள்ள நதியொன்று
3. தாவரங்கள் நிலத்தில் உறுதியாக நிற்க உதவும் ஒரு தாவரப் பகுதி
4. பெயராகவும் வினையாகவும் வரக்கூடிய சொல்
5. நெருப்பு (குழம்பியுள்ளது)
7. அரசாட்சி நிலவும் காலத்தில் அரச குடும்பத்தினரின் பயணங்களுக்காக பயன்படுத்திய வாகனம் (குழம்பியுள்ளது)
9. இரத்தம்

பெயர் :- ...........................................

முகவரி :- ...........................................

பாடசாலை :- ...........................................

வகுப்பு :- ...........................................

### போட்டி விதி முறைகள்

1. சரியான விடைகளை உரிய சதுர கட்டங்களில் நிரப்பி கீழேயுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து, தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி மே 27ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வையுங்கள்.
2. சரியான விடைகளை எழுதியோரில் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர். 3 அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் அடுத்துவரும் இதழ்களில்பிரசுரமாகும்.

எமது முகவரி →

குறுக்கெழுத்துப் போட்டி - 5
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### போட்டி. இல - 03இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நோ | ப | ல் | | பா | ல் |
| யா | ப் | ப | கு | வை | |
| ளி | பா | | ந | | தே |
| | ளி | | த் | தை | வ |
| வி | | ப | தி | அ | ர் |
| செ | ன் | னை | | த் | |

பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. பி. ஷங்கீதா
தரம் - 6, இந்துக் கல்லூரி
இரத்மலானை
2. எம்.கே.எப்.ரினோஷா
தரம் - 11, அஸ்ஸாலம் மு.ம.வி., இறக்குவானை
3. ஐ.பிரியதர்ஷனி, தரம் -
மே.மா/ஹொ/மில்லகந்த த.ம.வி
மில்லகந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைவதினால் ஏற்படும் விளைவுகள்




## வளி

**பின்வரும் காரணங்களால் வளி மாசடைகின்றது.**

* மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை
* மின் சக்தி நிலையங்கள்
* மோட்டார் கார் உற்பத்தி
* பசளை உற்பத்தித் தொழிற்சாலைகள்
* இடிக்கப்படும் கட்டிடங்கள்
* கரையும் திண்மங்களிலிருந்து வெளியேறும் ஆவியாக்கம்
* எரிமலை வெடிப்புகள்
* பாதைகள் நிர்மாணம்
* காட்டுத் தீ





**இவற்றினால் ஏற்படும் விளைவுகள்**

புவி வெப்பமடைதல், அசிட் (அமில) மழை, மூடுபனி, ஓசோன் படையில் ஓட்டை விழுதல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன.

## மண்

நிலம் அல்லது மண் பின்வரும் காரணங்களால் மாசடைகின்றது

* விவசாய நடவடிக்கைகள்
* சுரங்கத் தொழிலும், கல்லுடைத்தலும்
* வீட்டிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள்
* கட்டிடங்களை இடித்தலும் மற்றும் கட்டுதலும்
* தொழிற் சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள்

**இவற்றினால் ஏற்படும் விளைவுகள்**

ஒவ்வொரு ஆண்டும் அதிகமான நிலங்கள் மனிதனாலும் மிருகங்களினாலும் உபயோகமற்ற தாக்கப்படுவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## கதிர் வீச்சு

கதிர் வீச்சின் காரணமாக ஏற்படும் மாசடைதல் பின்வருவனவற்றால் ஏற்படுகின்றது

* அணு சக்தி (Nuclear) உலைகள்
* அணுவாயுதங்களின் உற்பத்தி
* அணுவாயுதக் கழிவுகள்
* யுரேனிய அகழ்வுகள்

**இவற்றினால் ஏற்படும் விளைவுகள்**

கதிர் வீச்சு அநேகமாகத் தாழ் மட்டங்களில் உருவாக்கப்படுகிறது. இவை குவிவடைந்து ஒருங்கிணைக்கப்படும் போது கதிர்வீச்சு அதிகமாக வாழிடங்களில் வெளியேற்றப்படல் உயிர் வாழும் சகல உயிர்களுக்கும் பெரும் தீங்காக அமையும்.

## நீர்

பின்வரும் காரணங்களால் நீர் மாசடைகின்றது.

* விவசாயத்திற்காக மனிதனால் தயாரிக்கப்படும் இரசாயனங்கள்
* பாரமான உலோகங்கள்
* தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள்
* நதிப்படுக்கையில் படியும் அடையல்கள்.
* வளி மாசடைதலால் நீர் மாசடைதல்.
* புவி மேற்பரப்பு (வெப்பமடைதல்) மாசடைதல்.
* பெற்றோலிய அகழ்வு - உற்பத்தி
* குப்பைகளை குவிப்பதால் மாசடைதல்.
* கப்பல் மூலமான எண்ணெய்ப் போக்குவரத்து

**இதனால் ஏற்படும் விளைவுகள்**

புவிக்கோளத்திலுள்ள நீரானது சகல உயிரினங்களாலும் திரும்பவும் திரும்பவும் பயன்படுத்தப்படுவதுடன் இவ்வித மீள் பயன்படுத்துகையால் புவியின் உயிரின் உயிரின மண்டலம் தொடர்ச்சியாக மாசுபடுத்தப்படுகின்றது.

## ஒலி

**ஒலி மாசடைதல் பின்வரும் காரணங்களால் ஏற்படுகின்றது**

* போக்கு வரத்து நெரிசலும், பாதைகளில் வாகனங்களின் ஒலியும்.
* ஒலி பெருக்கி மற்றும், உயர் ஒலி அழுத்த இசைக் கச்சேரிகள்.
* விமானங்களால் ஏற்படும் ஒலி.
* புகையிரதங்கள் மூலம் ஏற்படும் ஒலி.
* வீட்டுப் பாவனைப் பொருட்களால் ஏற்படும் ஒலி.
* கைத்தொழிற் சாலைகள் மூலம் ஒலி.

**இவற்றினால் ஏற்படும் விளைவுகள்**

எந்நேரமும் நாம் ஒலியைக் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். ஆனால் அதிக ஒலி எமக்குக் கோபம் மற்றும் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது.

## ஒளி

ஒளி மாசடைதல் அனேகமாகப் பாதை விளக்குகள், அல்லது பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தும் விளக்குகள், இரவு நேரங்களில் வாகனங்களின் முகப்பு விளக்குகள் போன்ற வெளிப்பகுதி மின் விளக்குகள் மூலம் விரைவில் ஒளி மாசடைவு ஏற்படுகின்றது.

இவ் விளக்குகளின் ஒளி வானில் தெறிப்படைவதுடன், இதன் மூலம் செம்மஞ்சள் நிற மூடுபனி போன்ற ஒளி நகரின் மேற்புறம் மின்னுவதைக் காணலாம்.

**இதனால் ஏற்படும் விளைவுகள்**

இரவு வானில் மின்னும் நட்சத்திரங்களைத் தெளிவாகப் பார்க்க முடியாமல் செய்கின்றன. இதனை நாம் கட்டுப்படுத்த முடியாவிடில் மாசடைதல் தொடர்ச்சியாக ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை, சித்திரம்: உதயா

5

# மாமரத்து பூதம்




# விவசாயியும் நீலஅரக்கனும்

கதை, சித்திரம்: தீசா

5




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2004 மே மாதம் 17ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org